# அத்தியாயம் 6

# இறைக் கொள்கையும் அரச நிதியும்







## 6.1 பொதுநோக்கு


வரவு செலவுத்திட்டத்துடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்ட நடுத்தர கால பேரண்ட இறைக்கட்டமைப்பு 2008-2011இல் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதில் வரவு செலவுத்திட்டம் 2008இன் இறைக்கொள்கை உபாயம் கவனம் செலுத்தியது. பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியின் உயர் மட்டத்தை அடைவதை நோக்காகக் கொண்ட "பத்தாண்டு அபிவிருத்திக் கட்டமைப்பு: 2006 - 2016" (பத்து வருட தொலைநோக்கு)இல் தெளிவாகக் கூறப்பட்டுள்ள அரசின் ஒட்டு மொத்த அபிவிருத்தி உபாயத்தின் அடிப்படையில் நடுத்தரகாலப் பேரண்ட இறைக்கட்டமைப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. இதன்படி, தனியார்துறை பொருளாதாரச் செயற்பாடுகளைத் தூண்டுவதற்காக அரச முதலீட்டை அதிகரிக்கும் அதேவேளை நடைமுறைக் கணக்கில் மிகையை உருவாக்குவதற்கு அரசிறையை அதிகரித்து மீண்டெழும் செலவினத்தை ஒழுங்குமுறைப்படுத்தும் குறிக்கோளுடன் பல கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

எனினும், வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுத் துறைகளிலான பல நிகழ்வுகளின் காரணமாக வரவு செலவுத்திட்டம் 2008இன் இலக்குகளை அடைவது சவால்மிக்கதாக விளங்கியது. வெளிநாட்டுத்துறையில், 2008 யூலை இறுதி வரை நிலவிய பெற்றோலியம், வளமாக்கி மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் பன்னாட்டு விலைகள் முன்னைய ஆண்டைப் போன்றே தொடர்ந்தும் சவால்மிக்கதாக விளங்கின. மிக முக்கியமாக, 2008 செத்தெம்பர் நடுப்பகுதியிலிருந்து தீவிரமடைந்த உலகளாவிய நிதியியல் நெருக்கடி பொருளாதாரச் செயற்பாடுகளில் மெதுவடைவை விளைவித்து குறிப்பிடத்தக்க அரசிறைப் பற்றாக்குறைகள், அரச பிணையங்களிலான வெளிநாட்டு முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல் மற்றும் வரவு செலவுத்திட்ட நிதியிடலுக்காக எதிர்பார்க்கப்பட்ட வர்த்தகக் கடன்பாடுகள் கிட்டத்தட்ட வறிதாகிச் செல்லல் என்பவற்றிற்கு இட்டுச் சென்று அதன்மூலம் இறைத் தொழிற்பாடுகளுக்கு கடுமையான சவால்களை ஏற்படுத்துகிறது. பயங்கரவாதத்திற்கெதிரான தீவிரமான போருக்கான நிதிகளை ஒதுக்கீடு செய்தல், கிழக்கு மாகாணத்திலும் மற்றும் வடக்கு மாகாணத்தில் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலும் மீள்குடியேற்றம், புனரமைப்பு மற்றும் மீள்நிர்மாணச் செயற்பாடுகளை விரைவுபடுத்தல், உயர் பணவீக்கம் காரணமாக நிலவிய உயர் வட்டி வீதங்களால் ஏற்பட்ட உயர் வட்டிச் செலவினம் என்பன உள்நாட்டுத்துறையில் காணப்பட்ட முக்கிய சவால்களினுள் உள்ளடங்கியிருந்தன. இவ்

அபிவிருத்திகள் குறிப்பாக இவ்வாண்டில் நான்காம் காலாண்டின் ஆரம்பத்தில் இலக்கிடப்பட்ட மட்டங்களிலிருந்து இறைத் திரட்சி பாதை விலகிச் செல்வதற்கு வழியமைத்ததன் மூலம் 2008இல் இறுதி இறைப் பெறுபேறுகளை குறிப்பிடத்தக்களவில் மாற்றியது.

**மேற்கூறிய சவால்களுக்கு மத்தியில் இறைத்துறை 2008இல் கலப்பான செயலாற்றத்தைப் பதிவு செய்தது.** 2008இன் முதல் ஒன்பது மாதங்களில் இறைச் செயலாற்றம் சில துறைகளில் விலகல்கள் காணப்பட்ட போதிலும் பரந்தளவில் இலக்குகளுடன் இணங்கிக் காணப்பட்டது. மொத்த அரசிறை 22 சதவீதம் கொண்ட உயர் வீதத்தில் சார்பு ரீதியில் தொடர்ந்து அதிகரித்திருக்கையில் மொத்தச் செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கல் 20 சதவீத அதிகரிப்புடன் முகாமைப்படுத்தக் கூடிய மட்டத்தில் தொடர்ந்து விளங்கியது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியிடல்களிடையே ஓரளவு திருப்திகரமான நிதியிடல் கலப்பு பேணப்பட்டதுடன் அரசு 2008 செத்தெம்பர் வரை குறிப்பாக மத்திய வங்கி உள்ளிட்ட வங்கித்தொழில் துறையிலிருந்து பெறப்பட்ட கடன்பாடுகளை தொடர்ந்து மீள்கொடுப்பனவு செய்தது. எனினும், மோசமடைந்த உலகளாவிய நிதியியல் நெருக்கடி பொருளாதாரச் செயற்பாடுகளைப் படிப்படியாகப் பாதிக்கத் தொடங்கியதைத் தொடர்ந்து இப் போக்கு மாற்றமடைந்தது. இதன் விளைவாக, 2008இன் அரசிறைச் சேகரிப்பு இலக்கை விட கணிசமானளவு குறைந்த மட்டத்திற்கு வந்து முன்னைய ஆண்டின் மொ.உ.உற்பத்தியின் 15.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 14.9 சதவீதத்தைப் பதிவு செய்தது. பெயரளவு நியதிகளில் மீண்டெழும் செலவினம் மொ.உ.உற்பத்தியின் 16.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த போதும் இது வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை விட அதிகரித்தது. அரச முதலீடு மொ.உ.உற்பத்தியின் 6.0 சதவீதத்தில் பேணப்பட்டதுடன் இது முன்னைய ஆண்டின் 6.4 சதவீதத்தை விட சிறிய வீழ்ச்சியைப் பிரதிபலிக்கிறது. எனினும், இது இவ்வாண்டின் பிற்பகுதியில் வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாடுகள் கிடைக்காமை மற்றும் அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தை முன்னுரிமைப்படுத்துவதற்கு இட்டுச் சென்ற அரசிறையில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவாக இணைக்கிணை நிதியங்களை வழங்குவதிலான பிரச்சனைகளின் முக்கிய காரணத்தால் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை விட குறிப்பிடத்தக்களவில் குறைவாகவே விளங்கியது. இவ் அபிவிருத்திகளின் இணைந்த வெளிப்பாடாக ஒட்டுமொத்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை ஆரம்ப இலக்கான 7.0

வரைபடம் 6.1 முதன்மை இறைக் குறிகாட்டிகள் (மொ.உ.உ.இன் சதவீதமாக)




சதவீதத்துடன் ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டைப் போலவே மொ.உ.உற்பத்தியின் 7.7 சதவீதத்தில் மாற்றமின்றி தொடர்ந்து விளங்கியது.

**2008இல் ஒட்டுமொத்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையின் நிதியிடல் கலப்பு ஆரம்ப வரவு செலவுத்திட்டத்தின் இலக்கிடல்களுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தைப் பிரதிபலித்தது.** அரசிறைச் சேகரிப்பிலான பற்றாக்குறை, மீண்டெழும் செலவினம் விஞ்சிச் சென்றமை, உலகளாவிய நிதியியல் நெருக்கடியின் விளைவாக எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாடுகள் கிடைக்கப்பெறாமை, திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளிலான வெளிநாட்டு முதலீடுகள் மீளப் பெறப்பட்டமை என்பன வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை நிதியிடுவதற்கு குறிப்பாக வங்கித்தொழில் முறை உள்ளிட்ட உள்நாட்டு நிதியிடலில் கூடியளவு தங்கியிருப்பதற்கு அரசை இட்டுச் சென்றது. இதன்படி, உள்நாட்டு மூலங்களிலிருந்தான தேறிய நிதியிடல் ஆரம்ப வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட ரூ.155 பில்லியனிலிருந்து ரூ.310 பில்லியனுக்கு அதிகரித்தது. இதில், வங்கித்தொழில் துறையிலிருந்தான கடன்பாடுகள் வரவு செலவுத்திட்ட இலக்கான ரூ.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.195 பில்லியனாக விளங்கியது. இதில் 73 சதவீதம் அல்லது ரூ.143 பில்லியன் 2008இன் நான்காம் காலாண்டில் பெறப்பட்ட கடனாகும். 2008இல் மொத்த தேறிய வெளிநாட்டு நிதியிடல் ரூ.26.6 பில்லியனாக விளங்கியது. இதேவேளை மொ.உ.உ. உற்பத்திக்கான அரசின் வெளிநின்ற படுகடன் விகிதம் 2007இன் 85 சதவீதத்திலிருந்து 81.1 சதவீதத்திற்கு தொடர்ந்து வீழ்ச்சியடைந்து 2008இல் பெயரளவுப் படுகடனிலான வீழ்ச்சியை விட பெயரளவு மொ.உ.உற்பத்தியின் உயர் வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது.

**குறிப்பாக, தொடரும் உலகளாவிய நிதியியல் நெருக்கடி மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் புனரமைப்பு மற்றும் மீள்நிர்மாணச் செயற்பாடுகளை விரைவுபடுத்த வேண்டிய தேவையின் மத்தியில் வரவு செலவுத்திட்டம் 2009இன் இலக்குகளை அடைவது சவால்மிக்க பணியாகும்.** பொருளாதாரச் செயற்பாடுகளில் ஏற்படும் எந்தவொரு மேலதிக மெதுவடைவும் 2009இல் எதிர்பார்க்கப்பட்ட அரசிறைச் சேகரிப்பைக் குறைவடையச் செய்யும். இவ்வாண்டில், உலகளாவிய நிதியியல் நெருக்கடிகளின் தாக்கங்களின் விளைவாக உள்ளார்ந்த வளம்மிக்க அபிவிருத்திகள், இலங்கைப் பொருளாதாரம் மீதான நெருக்கடியின் எதிர்க்கணிய விளைவுகளை குறைப்பதற்கான மேலதிக இறைக் கொள்கை வழிமுறைகளூடாக பலமான கேள்வித் தூண்டலை வழங்குவதற்கு தீர்க்கமானதும் உரிய முறையில் புரிந்து கொள்ளக்கூடிய பதிலிறுப்புகளைப் பின்பற்றுவதற்கு அரசைத் தேவைப்படுத்தலாம். அத்தகைய சூழ்நிலையொன்றில், மட்டுப்படுத்தப்பட்ட இறை இடைவெளியைக் கருத்திற் கொண்டு, அத்தகைய வழிமுறைகள் தற்காலிகமாக நன்கு இலக்கிடப்பட்டுள்ளதையும் குறிப்பிடத்தக்க இறை நழுவல்களை உருவாக்காது பொருளாதாரச் செயற்பாடுகளைத் தூண்டுவதற்கு பங்களிப்புச்செய்யும் என்பதை உறுதிப்படுத்துவது மிக முக்கியமாகும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் புனரமைப்பு மற்றும் மீள்நிர்மாணச் செயற்பாடுகளுக்கான நிதியங்களின் அதிகரித்த தேவைப்பாடும் அதற்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் கருதி பூர்த்தி செய்யப்பட வேண்டும். எனவே, அரசிறைப் பற்றாக்குறையை மிகவும்

**அட்டவணை 6.1** அரசிறைத் தொழிற்பாடுகளின் தொகுப்பு

| விபரம் | 2007 | 2008 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 2008 தற்காலிக மானவை | 2009 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|
| | ரூ. மில்லியன் | | | |
| மொத்த அரசிறை | 565,051 | 750,741 | 655,259 | 854,999 |
| வரி அரசிறை | 508,947 | 677,259 | 585,621 | 779,138 |
| வரியல்லா அரசிறை | 56,104 | 73,482 | 69,639 | 75,861 |
| செலவினமும் மீள்கொடுப்பனவைக்கழித்த கடன் வழங்கலும் | 841,604 | 1,044,188 | 996,126 | 1,191,671 |
| நடைமுறை | 622,758 | 712,894 | 743,710 | 823,511 |
| மூலதனமும் தேறிய கடன் வழங்கலும் | 218,846 | 331,294 | 252,416 | 368,161 |
| இதில் அரச முதலீடு | 229,274 | 335,672 | 263,860 | 370,765 |
| நடைமுறைக்கணக்கு மிகை(+)/குறை(-) | -57,706 | 37,847 | -88,450 | 31,487 |
| முதன்மைக்கணக்கு மிகை(+)/குறை(-) | -93,871 | -83,622 | -128,391 | -86,234 |
| முழுமொத்தக் குறை | -276,552 | -293,447 | -340,866 | -336,672 |
| மொத்த நிதியிடல் | 276,552 | 293,447 | 340,866 | 336,672 |
| வெளிநாட்டு நிதியிடல் | 131,415 | 138,645 | 26,579 | 153,547 |
| வெளிநாட்டுக் கடன்கள் (அ) | 100,907 | 109,895 | -4,643 | 123,019 |
| வெளிநாட்டுக் கொடைகள் | 30,508 | 28,750 | 31,222 | 30,528 |
| உள்நாட்டு நிதியிடல் | 127,737 | 154,802 | 310,042 | 183,125 |
| சந்தை கடன்பாடுகள் | 127,077 | 154,802 | 309,669 | 183,125 |
| வங்கியல்லா | 111,308 | 145,802 | 114,436 | 165,625 |
| வங்கி | 15,769 | 9,000 | 195,233 | 17,500 |
| நாணய மேலாண்மை | -13,098 | - | 118,403 | - |
| வர்த்தக வங்கிகள் | 28,867 | - | 76,830 | - |
| சந்தையல்லாக் கடன்பாடுகள் | 660 | - | 373 | - |
| செய்யப்பட வேண்டிய கொடுப்பனவுகள் | 17,400 | - | 4,245 | - |
| | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக | | | |
| மொத்த அரசிறை | 15.8 | 18.0 | 14.9 | 16.4 |
| வரி அரசிறை | 14.2 | 16.2 | 13.3 | 14.9 |
| வரியல்லா அரசிறை | 1.6 | 1.8 | 1.6 | 1.5 |
| செலவினமும் மீள்கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கலும் | 23.5 | 25.0 | 22.6 | 22.8 |
| நடைமுறை | 17.4 | 17.1 | 16.9 | 15.8 |
| மூலதனமும் தேறிய கடன் வழங்கலும் | 6.1 | 7.9 | 5.7 | 7.1 |
| இதில் அரச முதலீடு | 6.4 | 8.0 | 6.0 | 7.1 |
| நடைமுறைக்கணக்கு மிகை (+)/குறை (-) | -1.6 | 0.9 | -2.0 | 0.6 |
| முதன்மைக்கணக்கு மிகை(+)/குறை(-) | -2.6 | -2.0 | -2.9 | -1.7 |
| முழுமொத்தக் குறை | -7.7 | -7.0 | -7.7 | -6.5 |
| மொத்த நிதியிடல் | 7.7 | 7.0 | 7.7 | 6.5 |
| வெளிநாட்டு நிதியிடல் | 3.7 | 3.3 | 0.6 | 2.9 |
| வெளிநாட்டுக் கடன்கள் (அ) | 2.8 | 2.6 | -0.1 | 2.4 |
| வெளிநாட்டுக் கொடைகள் | 0.9 | 0.7 | 0.7 | 0.6 |
| உள்நாட்டு நிதியிடல் | 3.6 | 3.7 | 7.0 | 3.5 |
| சந்தை கடன்பாடுகள் | 3.6 | 3.7 | 7.0 | 3.5 |
| வங்கியல்லா | 3.1 | 3.5 | 2.6 | 3.2 |
| வங்கி | 0.4 | 0.2 | 4.4 | 0.3 |
| நாணய மேலாண்மை | -0.4 | - | 2.7 | - |
| வர்த்தக வங்கிகள் | 0.8 | - | 1.7 | - |
| சந்தையல்லாக் கடன்பாடுகள் | ... | - | ... | - |
| செய்யப்பட வேண்டிய கொடுப்பனவுகள் | 0.5 | - | 0.1 | - |

(அ) வெளிநாட்டு முதலீட்டாளருக்கு வழங்கப்பட்ட ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி உண்டியல்களையும் முறிகளையும் உள்ளடக்குகின்றது

மூலம் : நிதி திட்டமிடல் அமைச்சு

குறைப்பதற்கான பயனுள்ள வழிமுறைகளை எடுத்தல் மற்றும் சாத்தியமானவரை கூடியளவிற்கு மீண்டெழும் செலவினத்தில் வசதியை உருவாக்கல் என்பன இச்சவால்களை எதிர்கொள்வதற்கான ஒட்டுமொத்த உபாயத்தின் முக்கியமான கூறுகளாகும். அதனால், இச்சோதனைமிக்க காலப்பகுதியில் அரசின் இறைத் தொழிற்பாடுகள் நிதியியல் நெருக்கடியிலிருந்து எழும் பாதகமான பல விளைவுகளை குறைப்பதை நோக்கி நெறிப்படுத்தப்பட வேண்டும். இப் பிரச்சனைகள் தீர்ந்ததும் அரசு வரவு செலவுத்திட்டம் 2009இல் அறிவிக்கப்பட்ட வழமையான நடுத்தரகால இறைத் திரட்சிப்பாதைக்கு மாறக்கூடியதாக இருக்கும்.

## 6.2 இறைக் கொள்கைப்போக்கும் வழிமுறைகளும்

**வரவு செலவுத்திட்டம் 2008 உடன் சமர்ப்பிக்கப்பட்ட நடுத்தரகால பேரண்ட இறைக் கட்டமைப்பில் நடுத்தரகால இறை உபாயத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளையும் "பத்தாண்டு தொலைநோக்கு" இல் தெளிவாகக் கூறப்பட்ட ஒட்டுமொத்தக் கொள்கை உபாயத்தையும் அடைவதற்காக நாணயக் கொள்கை உருவாக்கப்பட்டது.** இதன்படி, அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் நடைமுறைப்படுத்தலை விரைவுபடுத்துவதற்கு முன்னுரிமை கொடுக்கும் அதேவேளையில் அரசிறைச் சேகரிப்பை அதிகரிப்பதற்கும் மீண்டெழும் செலவினத்தை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதைத் தொடர்ந்து உலகளாவிய நிதியியல் நெருக்கடியின் சிக்கல்களைத் தணிப்பதற்காகவும் வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

**அரசிறைச் சேகரிப்பை அதிகரிப்பதற்கு அரசால் பல வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.** இவை, வரித் தளத்தை விரிவாக்கல், விசேட துறைகளுக்கான அபிவிருத்தி முன்னெடுப்புக்களாக சில விலக்களிப்புக்களை வழங்கும் அதேவேளை வரி வீதங்களை மாற்றியமைத்தல் மற்றும் வரி நிருவாகத்தை மேம்படுத்துதல் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. வருமான வரிகளை ஒழுங்குமுறைப்படுத்தல், பெறுமதிசேர் வரி முறைமை மற்றும் இறக்குமதித் தீர்வைகள், கலால் தீர்வை வீதங்களை மாற்றியமைத்தல், துறைமுகம் மற்றும் விமானநிலைய அபிவிருத்தி வரி விதிப்பு என்பன அரசிறைப் பக்கத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட முக்கிய திருத்தங்களாகும். இத்துடன், புதிய அரசிறை வழிமுறைகள் தொடங்குவதற்கு முன்பு தேவையான சட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டதுடன் இதன் விளைவாக, வரவு செலவுத்திட்டம் 2008இன் சகல அரசிறை முன்மொழிவுகள் தொடர்பான சட்டவாக்கம் மற்றும் வரவு செலவுத்திட்டம் 2009இல் மேற்கொள்ளப்பட்ட அநேகமான முன்மொழிவுகளும் அத்தகைய வழிமுறைகள் நடைமுறைக்கு வந்த போது நடைமுறையிலிருந்தன.

**வருமான வரிகளின் ஒழுங்குமுறைப்படுத்தல் பல வழிமுறைகள் ஊடாக மேற்கொள்ளப்பட்டன.** இவை, பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் விசேட அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கான சலுகைகளை வழங்குதல் மற்றும் விலக்களிப்புகளுக்கான ஏற்பாட்டை வழங்கும் அதேவேளையில் வருமான வரித் தளத்தைப் விரிவாக்குவதற்கும் வரி நிருவாகத்தை மேம்படுத்துவதற்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை உள்ளடக்குகிறது. இதன்படி, முதலீட்டுச் சபைச் சட்டம் மற்றும் உள்நாட்டு அரசிறைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வரி விடுவிப்புக்கள் திருத்தி அமைக்கப்பட்டதுடன் பொருளாதார பணிக் கட்டணமானது. குடிவகை மற்றும் உந்து ஊர்திகளுக்கு அதிகரிக்கப்பட்டதுடன் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களை உள்ளடக்கியுள்ள விற்பனையைக் கொண்ட கம்பனிகள் மீது பொருளாதாரச் சேவைக் கட்டணம் 0.25 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது.

**பெறுமதிசேர் வரி முறைமை பல மாற்றங்களை அறிமுகப்படுத்தியதன் மூலம் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டது.** கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்பட்ட நிதியியற்

பணிகள் மற்றும் புடவைக் கைத்தொழிலுக்கான நூலை இறக்குமதி செய்தல் அல்லது வழங்கல் போன்ற குறிப்பிட்ட விடயங்களுக்கு விலக்களிப்புக்களை வழங்கல், உபாயச் செயற்றிட்டங்களுக்கான மூலப் பொருட்கள் மற்றும் பொறியின் இறக்குமதி, கூட்டுறவுச் சங்கங்களால் மேற்கொள்ளப்படும் பொருட்கள் மற்றும் பணிகளின் வழங்கல், "கிழக்கின் உதயம்" இன் கீழ் அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்காக இறக்குமதி செய்யப்பட்ட பொறி மற்றும் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட அரிசி உற்பத்திகள் மற்றும் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட பாலை அடிப்படையாகக் கொண்ட பாற்பண்ணைப் பொருட்கள் என்பன மீதான பெறுமதிசேர் வரியைக் குறைத்தல் அவற்றுள் சிலவாகும். மேலும், கொடுக்கல் வாங்கல் இடம் பெற்ற திகதியிலிருந்து 12 மாத காலப்பகுதியினுள் மாத்திரமே உள்ளீட்டு வரவுக் கோரல்களை அனுமதிப்பதற்கு பெறுமதிசேர் வரிச் சட்டம் திருத்தப்பட்டதுடன் பெற்றோலின் இறக்குமதி அல்லது வழங்கல் மீதான பெறுமதிசேர் வரி வீதம் குறைக்கப்பட்டது. தெரிந்தெடுக்கப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மீது பிரயோகிக்கத்தக்க பெறுமதிசேர் வரி வீதங்கள் பன்னாட்டுச் சந்தையில் தொடர்பான பொருட்களின் விலை மாற்றங்களை பரிசீலனையில் எடுத்துக் கொண்ட பின்பு காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டது.

**சுங்கத் தீர்வை மற்றும் கலால் வரிகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு பல எண்ணிக்கையான வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.** இவை, பதினொரு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மீது சுங்கத் தீர்வை, பெறுமதிசேர் வரி, துறைமுகம் மற்றும் விமானநிலைய வரி விதிப்பு மற்றும் சமூக பொறுப்பாண்மைத் தீர்வை போன்ற பல தரப்பட்ட வரிகள் மற்றும் சுங்க மையத்தில் பிரயோகிக்கத்தக்க ஏனைய கட்டணங்களுக்குப் பதிலாக விசேட பண்டத் தீர்வையை விதித்தல், சுங்கத் தீர்வை மீது பிரயோகிக்கத்தக்க மிகைக் கட்டணத்தை அதிகரித்தல், பெற்றோல், தாவர எண்ணெய் மற்றும் தேங்காய் எண்ணெயின் இறக்குமதி மீது வழங்கப்பட்ட தீர்வைத் தளர்வை நீக்கல், அரச அலுவலர்களுக்கான உந்து ஊர்திகளின் இறக்குமதிக்காக தீர்வைச் சலுகைகளை வழங்கும் திட்டத்தை இடைநிறுத்தல், சிகரெட் மற்றும் குடிவகை மீதான கலால் வரியை அதிகரித்தல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

**ஏனைய பல வரி அரசிறை வழிமுறைகளும் அறிமுகப் படுத்தப்பட்டன.** பிரதேச உட்கட்டமைப்பு அபிவிருத்தி வரி விதிப்பு, சமூக பொறுப்பாண்மைத் தீர்வை, குடிவகை மீதான உரிமக் கட்டணத்தை புதுப்பிப்பதற்கான முத்திரைத் தீர்வை என்பனவும் அதிகரிக்கப்பட்டது. தெரிந்தெடுக்கப்பட்ட பொருட்கள் மீதான செஸ் வரி வீதங்கள் அதிகரிக்கப்பட்டிருக்கையில் பல புதிய பொருட்கள் மீது செஸ் வரி விதிக்கப்பட்டது. செல்லிடத் தொலைபேசி வாடிக்கையாளர்களுக்கான தீர்வை கம்பியில்லாத் தொலைபேசிகளை உள்ளடக்கும் வகையில் விரிவுபடுத்தப்பட்டது.

**முக்கிய அரசிறை முகவர்களின் அதாவது உள்நாட்டு அரசிறைத் திணைக்களம் மற்றும் இலங்கைச் சுங்கத்தின் வினைத்திறனையும் பயனுறுதியையும் மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை அறிமுகப்படுத்துவதனூடாக வரி நிருவாகத்தை மேலும் மேம்படுத்துவதற்கு முயற்சி செய்யப்பட்டது.** உள்நாட்டு அரசிறைத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள் நீண்ட காலப்பகுதியில் திணைக்களத்தால் பயன்படுத்தப்பட்ட பழமை வாய்ந்த "மென்கல முறைமையை" மாற்றீடு செய்து அரசிறை நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமையை ஆரம்பித்தல், குறிப்பாக கணக்காய்வு மற்றும் மேற்பார்வையில் வேலையில் சேர்க்கப்பட்ட புதிய ஆட்கள் அவர்களின் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்வதற்கு முறைசார் பயிற்சியை வழங்குதல் தேவைப்பட்ட பெறுமதிசேர் வரி பத்திரங்களை அதேநேரத்தில் பெறுவதற்கு வரி செலுத்துவோரை இயலச் செய்வதற்கு இலத்திரனியல் கோவையிடல் முறைமையை அறிமுகப்படுத்தல், வரி இசைவாக்கத்தை மேம்படுத்துவதற்கு பிரதேச மட்டத்திலான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளன. மேலும், கணக்குப் பதிவுத்துறையில் கம்பனிகளுக்குத் தேவையான வழிகாட்டலை வழங்குவதற்கு ஆலோசனைப் பிரிவொன்றை ஏற்படுத்துதல், வரி செலுத்துவோருக்கு வழிகாட்டல்/ ஆலோசனை வழங்குவதற்கு பிரதேச அலுவலகங்களில் தனியான பிரிவு, கொழும்பு மாவட்டத்திற்கு வெளியே அமைந்துள்ள கம்பனிகளின் அரசிறையைத் திரட்டுவதற்கு கூடிய கவனத்தைச் செலுத்தும் தனியான கம்பனிப் பிரிவு ஆகிய வழிமுறைகளையும் உள்நாட்டு அரசிறைத் திணைக்களம் மேற்கொண்டது. இலங்கை சுங்கத்தின் ஒட்டுமொத்த அரசிறைச் சேகரிப்பு செயல்முறையின் வினைத்திறனையும் பயனுறுதியையும் மேம்படுத்துவதற்கு அதனால் அறிமுகப்படுத்தப்பட்ட வழிமுறைகள் மேல் முறையீட்டுச் செயல்முறையை ஒழுங்குமுறைப்படுத்தல், தவறான செயற்பாடுகளைக் குறைப்பதற்கு பெறுமதியிடல் செயல்முறையை மேம்படுத்துவதற்கு தனியான மைய பெறுமதியிடல் தொழிற்பாட்டை அறிமுகப்படுத்தல் மற்றும் பொருட்களின் தரமிடப்பட்ட பெறுமதியிடலை உறுதிப்படுத்தல், இலங்கைச் சுங்கத்தினுள் "அரசிறை நிருவாக முகாமைத்துவ தகவல் முறை" போன்ற தரவுத் தளங்களை நிறுவுவதை வசதிப்படுத்தல், பாதுகாப்பு (உத்தரவாதம்) முகாமைத்துவ முறைமையை மையப்படுத்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

**இலங்கையின் அரசிறை நிருவாகத்தை நவீனப்படுத்தல் மற்றும் இறை முகாமைத்துவ செயல்முறையை மேம்படுத்துதல் ஆகிய குறிக்கோளுடன் இறை முகாமைத்துவ சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டம் 2008இல் தொடர்ந்து நடைபெற்றது.** அரசின் அரசிறை இலக்குகளை அடைவதில் ஊழியர்களின் மனோபாவங்கள் முக்கியமென இனங்காணப்பட்டுள்ளதால் இறை முகாமைத்துவ சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டம் முக்கியமாக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் கீழ்வரும் உள்நாட்டு அரசிறைத் திணைக்களம், இலங்கைச் சுங்கம், கலால் திணைக்களம், நிதி ஆணைக்குழு மற்றும் ஏனைய திணைக்களங்களிலுள்ள ஊழியர்களுக்குத் தேவையான பயிற்சியை வழங்குவதில் கவனம் செலுத்தியது. இதன்படி, அந்நிறுவனங்களிலுள்ள குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான ஊழியர்களுக்கு வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டது. சகல வரிகளுக்குமான விபரமான செயல்முறைத் திட்டங்களைத் தயாரித்தல், இடர்நேர்வின் அடிப்படையில் கணக்காய்வு தெரிவு முறை, ஊக்குவிப்புக்கள் மற்றும் பரிசுகளுடனான செயலாற்ற முகாமைத்துவச் செயல்முறையை அறிமுகம் செய்தல், பெறுமதி சேர் கூற்றுக்களின் இலத்திரனியல் கோவையிடலை விரைவுபடுத்தல் என்பன இறை முகாமைத்துவ சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உள்நாட்டு அரசிறைத் திணைக்களத்தினுள் அறிமுகப்படுத்தப்பட்ட ஊக்குவிப்புக்களிடையே காணப்பட்டன. இத்துடன், உள்நாட்டு

அரசிறைத் திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மாறும் உபாயத்திட்டம் மற்றும் நடவடிக்கைத் திட்டம் என்பனவும் இச் செயற்றிட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்டன.

**அரசு மீண்டெழும் செலவினத்தை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு பல வழிமுறைகளை அறிமுகப்படுத்தியது.** இதன்படி, மீண்டெழும் செலவினத்தைக் கட்டுப்படுத்துவதற்கு வழிகாட்டல்கள் அமைச்சுக்களுக்கு வழங்கப்பட்டது, பெற்றோலிய உற்பத்திகளின் சில்லறை விலைகள் செலவைப் பிரதிபலிக்கும் வகையில் சீர்திருத்தப்பட்டது, மின்வலுத் தீர்வை, புகைவண்டிக் கட்டணங்கள் மற்றும் பயணிகள் பேரூந்துக் கட்டணங்கள் போன்ற நிருவகிக்கப்பட்ட விலைகள் அதிகரித்த உள்ளீட்டுச் செலவுகளுடன் இணைந்து செல்லும் விதத்தில் மேல் நோக்கித் திருத்தப்பட்டன, ஆட்சேர்ப்புக்கள் தொழில்நுட்ப வகைகள் மற்றும் பாதுகாப்புப் படைகள் போன்ற விசேட வகைகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டன. மேலும், அரச பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட விடுப்பைக் காசாக்கும் வசதி 2008இல் நிறுத்தப்பட்டது. உலகளாவிய நிதியியல் நெருக்கடியிலிருந்து எழும் சவால்களை எதிர்கொள்ளும் பொருட்டு தெரிந்தெடுக்கப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகள் மீதான மீண்டெழும் செலவினத்தைக் குறைப்பதற்கு அரசு வழிமுறைகளை அறிமுகப்படுத்தியது. இதன்படி, கடப்பாடு செய்யப்படாத சகல வழங்கல்கள் மற்றும் பணிகளை முடக்குவதற்கும், மீண்டெழும் செலவினம் மீது எந்தவொரு மேலதிகக் கடப்பாடுகளை உருவாக்காமல் இருப்பதற்கும், ஏனைய ஏற்பட்ட சகல மீண்டெழும் செலவினத்தைப் பிற்போடுவதற்கும் செலவிடும் முகவர்களுக்கு 2008 நவெம்பரில் ஆலோசனை கூறப்பட்டது.

**அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்களுக்கு சனவரி மற்றும் யூலையில் கொடுக்கப்பட வேண்டிய முறையே ரூ.375.00 மற்றும் ரூ.187.50 கொண்ட வாழ்க்கைச் செலவுப்படியை அரசு வழங்கியது.** மேலதிகக் கொடுப்பனவு ரூ.625 உம் 2008 யூலையில் வழங்கப்பட்ட போதிலும் இது ரூ.22,000 இற்குக் குறைவான மாதச் சம்பளத்தைப் பெறும் அரச ஊழியர்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டது. "தறுன அறுன" நிகழ்ச்சித்திட்டத்தில் பதிவு செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான பட்டதாரிகளுக்கு மாகாண மட்டத்திலுள்ள அரச பணிக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன.

**புதிதாக விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆட்களை மீளக் குடியமர்த்துதல் கூடிய உறுதியுடன் தொடர்ந்து நடைபெற்றது.** குறிப்பாக, மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்த ஆட்களுக்கு அடிப்படை தேவைகளும் வாழ்வாதாரங்களும் வழங்கப்பட்டன. பல உள்நாட்டு மற்றும் பன்னாட்டு முகவர்களிடமிருந்து உதவியைப் பெற்று கிழக்கின் உதயம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்தில் இடம் பெயர்ந்த ஆட்களை மீளக் குடியமர்த்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களும் தொடர்ந்து நடைபெற்றது.

**பிரதேச ரீதியில் ஏற்றத்தாழ்வற்ற பொருளாதார அபிவிருத்தியை அடைவதற்கு அரச முதலீட்டை விரைவுபடுத்துவதற்காக கூடிய மூலவளங்களை வழங்குவதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டது.** இதன்படி, தேசிய மட்டத்தில் பிரதான உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதுடன் நெடுஞ்சாலைகள், பாலங்கள் மற்றும் மேம்பாலங்கள், துறைமுகங்கள் மற்றும் வலுச் செயற்றிட்டங்களில் கணிசமான முன்னேற்றம் மேற்கொள்ளப்பட்டது. இத்துடன், நகரப் பிரதேசங்களில் பாரிய அளவு நீர் வழங்கல் திட்டங்கள் மற்றும் சாக்கடை முறைமைகள் மற்றும் பொது போக்குவரத்து வசதிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கையில் மொறககந்த தெதுறு ஓயா மற்றும் நீர்ப்பாசனச் செயற்றிட்டங்களும் தொடர்ந்து நடைபெற்றன. அரசு "மகநெகும" மற்றும் "கமநெகும" செயற்றிட்டங்களூடாக மாகாண மற்றும் கிராமிய உட்கட்டமைப்பை தொடர்ந்து மேம்படுத்தியது. இதேவேளை, சிறந்த அரச செலவின முகாமைத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கு அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் பயனுள்ள நடைமுறைப்படுத்தலை மேம்படுத்தும் பொருட்டு தேவையான வழிகாட்டல்களும் அறிவுறுத்தல்களும் செலவிடும் முகவர்களுக்கு வழங்கப்பட்டன.

**பல தசாப்தங்களாக நீடித்த முரண்பாடு காரணமாக நீண்ட காலப்பகுதிக்கு தடைப்பட்டிருந்த அதன் உள்ளார்ந்த வளத்தை கட்டுப்பாடின்றி செல்ல அனுமதிப்பதற்கு வசதிப்படுத்தும் பொருட்டு கிழக்கு மாகாணத்திலுள்ள அபிவிருத்திச் செயற்பாடுகள் விரைவுபடுத்தப்பட்டன.** இதன்படி, பல உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் நேரடியாக தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்திக்குமான அமைச்சு மற்றும் கிழக்கின் உதயம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஏனைய தொடர்பான அமைச்சுக்களால் ஒருங்கிணைக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருந்தன. கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளின் தொடர்பில், குறிப்பாக மீள்குடியேற்றம், பொருளாதார உட்கட்டமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு போன்ற விடயங்களிற்கு, 2006 - 2008 காலப்பகுதியில் ரூ.103 பில்லியனை அரசாங்கம் தாங்க வேண்டியிருந்தது. கிழக்கு மாகாணத்திற்கும் அது போல் ஏனைய பின்தங்கிய பிரதேசங்களுக்கும் முதலீட்டை ஈர்க்கும் பொருட்டு பல வகையான ஊக்குவிப்புக்களும் அரசால் வழங்கப்பட்டது. பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து வட மாகாணம் விடுவிக்கப்பட்டதும் வடக்கின் வசந்தம் என அழைக்கப்படும் இதே மாதிரியான நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமென அரசு அறிவித்துள்ளது (சிறப்புக் குறிப்பு 2 ஐப் பார்க்கவும்).

**அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் அவற்றின் செயலாற்றத்தை மேம்படுத்துவதை வசதிப்படுத்துவதற்காக உபாய தொழில்முயற்சி முகாமைத்துவ முகவர் அதன் செயற்பாடுகளை தொடர்ந்தும் இவ்வாண்டில் மேற்கொண்டது.** வங்கித்தொழில்துறை கொத்தணியில், வங்கிகளின் செயலாற்ற மதிப்பீடு காலாண்டு ரீதியிலான முக்கிய செயலாற்ற குறிகாட்டிகளின் அடிப்படையில் தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டது. பெருந்தோட்டக் கொத்தணியானது புதிய உபாய முகாமைத்துவ முன்னெடுப்புக்களுடன் பல பெருந்தோட்டங்களின் இலாபகரத் தன்மையை அதிகரிக்க உதவியிருக்கையில் கரு வளர்ச்சி மாற்றல் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தேசிய கால்நடை அபிவிருத்திச் சபைக்கு தொழில்நுட்ப உதவியை வழங்குகிறது. போக்குவரத்து மற்றும் ஏற்பாடுகளை வழங்கும் கொத்தணி சொத்து அபிவிருத்தி முன்னெடுப்பிற்கும் உபாய தொழில்முயற்சி முகாமைத்துவ முகவரின் உதவியுடன் இலங்கை புகைவண்டிப் பகுதியில் வருமான மாதிரித் தன்மையினை மாற்றுவதற்கு நூலிடை கட்புல

தொடர்பூட்டல் உறுதிமிக்க முன்னெடுப்பிற்கும் அமைச்சரவை ஒப்புதலைப் பெற்றது. மேலும், பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய சபை முக்கிய பொருளாதாரக் கொள்கைகள் மீது ஆலோசனைகள் மற்றும் சிந்தனைகளுக்கான கூட்டத்தில் தொடர்ந்து பங்கேற்பதற்கும் பொருளாதார விடயங்கள் மீதான கொள்கை வழிகாட்டல்களை வழங்குகிறது.

**இவ்வாண்டில் அரச படுகடன் முகாமைத்துவச் செயற்பாட்டை மேம்படுத்துவதற்கு பல வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.** இதன்படி, திறைசேரி உண்டியல் நிகழ்ச்சித்திட்டத்தில் ஒரே நேரத்தில் பெருமளவு கொடுப்பனவை மேற்கொள்ளும் பிரச்சனையைத் தணிப்பதற்கும் நீண்ட முதிர்ச்சியையுடைய உண்டியல் வழங்கலை அதிகரிப்பதன் மூலம் முதிர்ச்சி அமைப்பை சுமூகமாக்குவதற்கும் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. திறைசேரி உண்டியல் சந்தை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் 2008 மேயில் திறந்து விடப்பட்டது. இது முதலீட்டாளர் தளத்தை விரிவாக்குவதற்கும் உள்நாட்டுச் சந்தை வட்டி வீதங்களிலான அழுத்தத்தைக் குறைக்கும் நோக்கிலும் வெளிநிற்கும் இருப்பின் 10 சதவீதம் கொண்ட ஆகக் கூடிய வரையறை வரை திறைசேரி உண்டியல்களில் முதலிடுவதற்கு அவர்களை அனுமதித்தது. இதேவேளை, தற்போதைய திறைசேரி முறித்தொடரை மீளத் திறப்பதற்கான கொள்கை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டதன் மூலம் உள்நாட்டுப் படுகடன் சந்தையின் கூடிய கூறாக்கல்களைத் தீர்ப்பதற்கும் திறைசேரி முறிகளின் வழங்கலிலான சிக்கலைக் குறைப்பதற்கும் புதிய முறித்தொடரின் அறிமுகத்தை கட்டுப்படுத்துகிறது. எனினும், 2007இல் உருவாக்கப்பட்ட அரச படுகடன் முகாமைத்துவ உபாயத்தின் கீழ் எதிர்பார்க்கப்பட்டவாறு சந்தைப் பொறிமுறையூடாக திறைசேரி முதிர்ச்சிகளுக்கு ஒரே நேரத்தில் கூடுதலான கொடுப்பனவு செய்யும் பிரச்சனையை வினைத்திறனுடன் தீர்ப்பதும் 2008இல் நிலவிய பேரண்டப் பொருளாதார நிலைமைகள் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதிக்கு விளைவு வளையியை நீடிப்பதும் சாத்தியமாக இருக்கவில்லை. மேலும், நாட்டுக்கான முறியின் திரவத்தன்மையை அதிகரிப்பதற்கு 2007 ஒத்தோபரில் வழங்கப்பட்ட அரசின் நாட்டுக்கான பன்னாட்டு முறையைக் கொள்வனவு செய்வதற்கு இரண்டாந்தரச் சந்தையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு அனுமதி வழங்கப்பபட்டது.

**உலகளாவிய நிதியியல் நெருக்கடியிலிருந்து பொருளாதாரம் மீதான தாக்கத்தைத் தணிக்கும் பொருட்டு அரசு, செயலாற்றம் மிக்க பொருளாதாரத் தூண்டல் பொதியை 2008இன் இறுதியில் அறிவித்தது.** இப்பொதி, தீவிரமடைந்த உலகளாவிய நிதியியல் நெருக்கடியின் பின்னணியில் குறிப்பாக இடர்பாடுகளுக்குள்ளான கைத்தொழிலாளர்கள், பெருந்தோட்ட மற்றும் சுற்றுலாத்துறைகளுக்கு நிவாரணத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட சில விசேட வழிமுறைகளை உள்ளடக்குகிறது. இத்துடன், வீழ்ச்சியடைந்து செல்லும் பன்னாட்டு விலைகளுடன் இணங்கிச் செல்லும் வகையில் பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் திரவ பெற்றோலிய வாயுவின் உள்நாட்டு விலைகளிலான குறைப்பும் இத் தூண்டல் பொதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. 2009இல் இப் பொதியை நடைமுறைப்படுத்துவதற்கு அரசின் மொத்தச் செலவு ரூ.16 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இது வரவு செலவுத்திட்டம் 2009இன் திட்டமிடப்பட்ட மீண்டெழும் செலவினத்தை இத் தொகையால் அதிகரிக்கும்.

**இதேவேளை, பல அரச வர்த்தக தொழில் முயற்சிகளில் நிதியியல்ரீதியாக நீடித்து நிலைத்திருக்கும் தன்மையைக் கொண்டிராமை அரச வரவு செலவுத்திட்டத்தில் தொடர்ந்து சுமையை ஏற்படுத்தும்.** நாட்டின் மூன்று முக்கிய அரச வர்த்தக தொழில் முயற்சிகளான இலங்கை போக்குவரத்துச் சபை, இலங்கை புகைவண்டி மற்றும் அஞ்சல் திணைக்களம் பாரிய தொழிற்பாட்டு இழப்புகளுடன் தொடர்ந்து தொழிற்பட்டன. பன்னாட்டு எண்ணெய் விலைகளிலான பெருமளவு அதிகரிப்புக்காக ஈடுசெய்வதற்காக 2008 யூனில் அதிகரிக்கப்பட்ட புகைவண்டிக் கட்டணங்கள் வீழ்ச்சியடைந்த உள்நாட்டு எரிபொருள் விலைகளுடன் இணங்கிச் செல்லும் வகையில் 2008 திசெம்பரில் குறைக்கப்பட்டன. எனினும், இம் மாற்றங்களின் தேறிய விளைவு அதன் தொழிற்படு இழப்புக்களை ஈடுசெய்ய போதுமானதாக இல்லாததால் இலங்கை புகைவண்டியின் நிதியியல் நிலைமை மேலும் நலிவுற்றது. இதேவேளை, அரசு இலங்கை புகைவண்டியின் புகைவண்டிப் பெட்டிகளின் இருப்பு நிலையை பலப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்தது. பயணிகள் பேருந்துக் கட்டணங்கள் 2008 மேயில் அதிகரிக்கப்பட்ட போதிலும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் அதிகரித்துச் செல்லும் செலவை ஈடுசெய்வதற்குப் போதுமானதாக இருக்கவில்லை. உள்நாட்டுப் பெற்றோலிய விலைகளிலான குறைப்புடன் பயணிகள் பேருந்துக் கட்டணங்களும் குறைக்கப்பட்டன. இலங்கைப் போக்குவரத்துச் சபை உயர் தொழிற்பாட்டு இழப்புக்களை தொடர்ந்து அறிவித்ததுடன் அதிகரித்த நடைமுறை மாற்றல்களூடாக அரசின் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை விரிவாக்கியது. எனினும், அரசு நடுத்தர காலத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பணி வழங்கலை மேம்படுத்துவதற்கு நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பித்தது. அஞ்சல் திணைக்களமும் 2007 ஏப்பிறலிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் அஞ்சல் கட்டணங்களின் திருத்தத்திற்கு மத்தியிலும் தொழிற்பாட்டு இழப்பை தொடர்ந்து அறிவித்தது. அரசு அவற்றின் தொழிற்பாடுகளை தொடர்ந்து நடைபெறுவதற்கு 2008இல் இவ்வரச வர்த்தக தொழில் முயற்சிகளுக்கு கணிசமான அளவு மாற்றல்களை வழங்கவேண்டியிருந்தது.

**அரசுக்குச் சொந்தமான முக்கிய தொழில் முயற்சிகளான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சபையின் நிதியியல் செயலாற்றம் ஆழ்ந்த கரிசனைக்குரிய விடயமாக தொடர்ந்து விளங்குகிறது.** 2008இல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தொழிற்பாட்டு இழப்பினை அடைந்தது. வர்த்தகரீதியில் நீடித்து நிலைத்திருக்கக் கூடிய நிறுவனமாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாடு குறிப்பாக இலங்கை மின்சபை உள்ளிட்ட பல அரச நிறுவனங்களிலிருந்தான வெளிநின்ற செலவினங்கள் தேறல் செய்யப்படாததால் பெருமளவுக்கு அச்சுறுத்தலுக்குள்ளாகியது. இதேவேளை, இலங்கை மின்சபையின் நிதியியல் நிலைமை அதன் தொழிற்பாட்டு இழப்புக்கள் அதிகரித்ததன் மூலம் 2008இல் மேலும் மோசமடைந்தது. தொழிற்படு இழப்புகளிலான அதிகரிப்பு முக்கியமாக 2008இன் முதலரைப்பகுதியில் உயர் பெற்றோலிய விலைகளின் விளைவாக ஏற்பட்ட அதிகரித்த செலவினத்தாலும் தீர்வையில் போதுமானதற்ற சீராக்கத்தாலும் ஏற்பட்டது. இலங்கை மின்சபையின் நிதியியல் நிலைமையின் வலுவற்ற தன்மை வங்கிகளிலிருந்தான திரண்ட குறுகிய கால கடன்பாடுகள், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

மற்றும் தனிப்பட்ட வலு உற்பத்தியாளர்களுக்கான வெளிநின்ற பொறுப்புக்கள் என்பவற்றில் வெளிப்படுத்தப்பட்டதுடன் அரசு வரவு செலவுத்திட்டம் மீது ஒரு நேரடித் தாக்கத்தைக் கொண்டிருந்த இலங்கை மின்சபையின் நீண்ட காலக் கடன்களுக்கு தொடர்ந்து பணிக் கொடுப்பனவை மேற்கொண்டது. இது, பொருத்தமான நியாயமான விலையிடற் கொள்கையை வைத்திருப்பதன் மூலம் இந் நிறுவனங்களின் நிதியியல், முகாமைத்துவத்தை திருத்தியமைப்பதற்கான அவசியத் தேவையை அழுத்திக் கூறுகிறது. இதேவேளை, மின்வலுத் துறையின் தொழிற்படு வினைத்திறன் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் பண்புகளை மேம்படுத்துவதற்கு உதவும் புதிய இலங்கை மின்வலு மசோதாவை பாராளுமன்றம் நிறைவேற்றியது.

## 6.3 அரசின் வரவு செலவுத்திட்ட தொழிற்பாடுகள்


### அரசிறை

**2008இல் அரசின் மொத்த அரசிறை 2007இன் ரூ.565 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.655.3 பில்லியனுக்கு 16 சதவீதத்தால் அதிகரித்தது.** வரி அரசிறை 15 சதவீதத்தால் வரியல்லா அரசிறை 24 சதவீதத்தாலும் அதிகரித்தன. எனினும், 2008இல் மொத்த அரசிறைச் சேகரிப்பு குறிப்பாக 2008இன் பிற்பகுதியில் ஊர்தி இறக்குமதிகளின் குறைந்த அளவு மற்றும் பெறுமதி மற்றும் உள்நாட்டு பொருளாதாரச் செயற்பாடுகளிலான மெதுவடைவு காரணமாக பன்னாட்டு வர்த்தகம் தொடர்பான வரிகளிலிருந்தான அரசிறையில் ஏற்பட்ட வீழ்ச்சியின் முக்கிய காரணத்தால் ஆரம்ப இலக்கான ரூ.751 பில்லியனை விட ரூ.95 பில்லியன் குறைவாக விளங்கியது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரசின் மொத்த அரசிறை 2007இல் பதிவு செய்யப்பட்ட 15.8 சதவீதத்திலிருந்து 2008இல் 14.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. கடந்த ஆண்டுகளைப் போலவே மொத்த அரசிறையில், 89 சதவீதம் வரி அரசிறையிலிருந்து ஏற்பட்டிருக்கையில் எஞ்சிய வரியல்லா அரசிறை 11 சதவீதமாக விளங்கியது.

**மொத்த அரசிறையில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கியமாக வருமான வரிகளிலிருந்தான அரசிறையில் பதிவு செய்யப்பட்ட 18 சதவீதம் கொண்ட சார்புரீதியிலான உயர் வளர்ச்சியால் உந்தப்பட்டது.** வரித் தளத்தை விரிவாக்குவதற்கும் சட்ட கட்டமைப்பைப் பலப்படுத்துவதற்கும் மேற்கொள்ளப்பட்ட கொள்கை மற்றும் நிருவாக வழிமுறைகளுடன் இணங்கிச் செல்லும் வகையில் தனியார் மற்றும் கம்பனி வருமான வரிகள்,

வரைபடம் 6.2

அரசின் அரசிறை உள்ளடக்கம் - 2008




அட்டவணை 6.2

அரசிறையின் பொருளாதாரப் பகுப்பாய்வு

| விபரம் | 2007 | 2008 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 2008 தற்காலிக மானவை | 2009 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|
| | ரூ. மில்லியன் | | | |
| **வரி அரசிறை** | **508,947** | **677,259** | **585,621** | **779,138** |
| வருமான வரிகள் | 107,169 | 143,291 | 126,541 | 166,703 |
| பெ.கூ.வ | 187,452 | 248,670 | 203,646 | 221,947 |
| கலால் தீர்வை | 96,675 | 113,639 | 89,903 | 134,965 |
| இறக்குமதித் தீர்வை | 55,986 | 73,436 | 63,844 | 90,592 |
| ஏனைய வரிகள் | 61,665 | 98,223 | 101,687 | 164,931 |
| **வரியல்லா அரசிறை** | **56,104** | **73,482** | **69,639** | **75,861** |
| **மொத்த அரசிறை** | **565,051** | **750,741** | **655,259** | **854,999** |
| | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக | | | |
| **வரி அரசிறை** | **14.2** | **16.2** | **13.3** | **14.9** |
| வருமான வரிகள் | 3.0 | 3.4 | 2.9 | 3.2 |
| பெ.கூ.வ/பொ.ப.வ. | 5.2 | 6.0 | 4.6 | 4.3 |
| கலால் தீர்வை | 2.7 | 2.7 | 2.0 | 2.6 |
| இறக்குமதித் தீர்வை | 1.6 | 1.8 | 1.4 | 1.7 |
| ஏனைய வரிகள் | 1.7 | 2.4 | 2.3 | 3.2 |
| **வரியல்லா அரசிறை** | **1.6** | **1.8** | **1.6** | **1.5** |
| **மொத்த அரசிறை** | **15.8** | **18.0** | **14.9** | **16.4** |

மூலம் : நிதி திட்டமிடல் அமைச்சு

பொருளாதார பணிக் கட்டணம் மற்றும் வட்டி வருவாய்கள் மீதான பிடித்து வைக்கும் வரி என்பவற்றிலிருந்தான அதிகரித்த அரசிறைச் சேகரிப்பு இம் மேம்பாட்டுக்குக் காரணமாகியது.

**பெறுமதிசேர் வரியிலிருந்தான அரசிறை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2008இல் 9 சதவீதம் கொண்ட குறைந்த வீதத்தால் அதிகரித்தது.** இக் குறைந்த வளர்ச்சி, அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய கைத்தொழில்களுக்கு அவற்றை ஊக்குவிப்பதற்காக பெறுமதிசேர் வரி விலக்களிப்புக்களை வழங்கல், பெற்றோல் மீதான பெறுமதிசேர் வரியை குறைத்தல், வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்துவதற்கு விசேட பண்டத் தீர்வையின் கீழ் வரும் தெரிந்தெடுக்கப்பட்ட அத்தியாவசிய பொருட்கள் மீதான பெறுமதிசேர் வரியை நீக்கல், குடிவகை மற்றும் சிகரெட் விற்பனைகளிலான வீழ்ச்சி, உந்து ஊர்திகள் இறக்குமதிகளிலான வீழ்ச்சி, அரச அலுவலர்களுக்கு உந்து ஊர்திகளின் இறக்குமதிக்கான சலுகை ரீதியான தீர்வைத் திட்டத்தைத் தொடர்ந்தமை, குறிப்பாக 2008இன் நான்காம் காலாண்டில் ஒப்பீட்டு ரீதியில் குறைவான இறக்குமதி விலைகள் மற்றும் இறக்குமதி அளவு என்பவற்றின் தாக்கத்தால் ஏற்பட்டது. எனினும், வரி நிருவாகத்திலான மேம்பாடுகள், தொலைத் தொடர்பூட்டல் மற்றும் பெறுமதிசேர் வரி, உள்ளீட்டு வரி வரவுகள் மீதான வரையறைகளுடன் இணைந்து நிதியியல் துறையிலான உயர் செயலாற்றம் மேற்கூறப்பட்ட வழிமுறைகள் காரணமாக பகுதியளவில் எதிரீடு செய்யப்பட்டது.

**2008இல் கலால் தீர்வைகளிலிருந்தான அரசிறை, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.** ஊர்தி இறக்குமதிகளிலான வீழ்ச்சி, உந்து ஊர்திகளை இறக்குமதி செய்வதற்கு அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட தீர்வைச் சலுகைகள், சிகரெட் விற்பனைகளின் கீழ் நோக்கிய போக்கு, குடிவகை விற்பனைகளிலான வீழ்ச்சி

இப் பற்றாக்குறைக்கான முக்கிய காரணிகளாக விளங்கின. எனினும், குடிவகை மீதான கலால் தீர்வை வீதங்களிலான அதிகரிப்பு, பியர் விற்பனையிலான உயர் வளர்ச்சி, சில வகை சிகரட்டுகளின் மேல் நோக்கிய தீர்வை வீதத் திருத்தம் என்பன அரசிறை இழப்பை பகுதியளவில் ஈடுசெய்தது. இதேவேளை, பெற்றோலிய இறக்குமதிகள் மீதான கலால் தீர்வையிலிருந்தான அரசிறை சிறிதளவு அதிகரிப்பைப் பதிவு செய்திருக்கையில் உள்நாட்டு பெற்றோலிய விற்பனைகள் மீதான கலால் வரியிலிருந்தான அரசிறை கிட்டத்தட்ட 10 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

**2008இல் இறக்குமதி தீர்வைகளிலிருந்தான அரசிறை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 14 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது.** இவ் அதிகரிப்பு, பல பொருட்களுக்கு வழங்கப்பட்ட தீர்வைத் தளர்த்தல்கள், விசேட பண்டத் தீர்வைகளின் கீழ் வரும் பொருட்கள் மீதான இறக்குமதித் தீர்வையை நீக்கல், ஊர்தி இறக்குமதிகளிலான வீழ்ச்சி, 2008 ஏப்பிறல் வரை ஊர்திகளை இறக்குமதி செய்வதற்கு அரச பணியாளர்களுக்கான சலுகை அடிப்படையிலான தீர்வை தொடர்ந்தமை, இந்தியா மற்றும் பாகித்தானுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் அநேகமான தீர்வை வீதங்கள் குறைவான சுங்கத் தீர்வை வீதங்களில் வைத்திருக்கப்பட்டமை, இவ்வாண்டின் பிற்பகுதியில் இறக்குமதிகள் மீதான உலகளாவிய நிதியியல் நெருக்கடி என்பவற்றிற்கு மத்தியிலும் அடையப்பட்டது. இறக்குமதி செய்யப்பட்ட பல எண்ணிக்கையான பொருட்களும் பிரயோகிக்கத்தக்க இறக்குமதிகள் மீதான மிகைக் கட்டணத்திலான அதிகரிப்பு சுங்கத் தீர்வையிலிருந்தான அரசிறையை அதிகரிப்பதற்கு ஓரளவிற்கு உதவியது.


**துறைமுகம் மற்றும் விமானநிலைய அபிவிருத்தித் தீர்வை, செஸ்வரி மற்றும் விசேட பண்டத் தீர்வை போன்ற ஏனைய மூலங்களிலிருந்தான வரி அரசிறையும் 2008இல் அதிகரித்தது.** இது பெரும்பாலும் தீர்வையற்ற கடைகளில் தீர்வையற்ற சலுகைகளை மட்டுப்படுத்தியமை, அதிகரித்த செஸ்வரிகள், பல புதிய பொருட்கள் மீது செஸ் வரியை விதித்தமையால் ஏற்பட்டது. இத்துடன், பிரதேச கட்டமைப்பு அபிவிருத்தித் தீர்வை, பற்றுவரி மற்றும் விசேட பண்டத் தீர்வை என்பவற்றிலான அதிகரிப்புகளும் ஏனைய வரிகளிலிருந்தான அரசிறையிலான வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்தது.

**வரியல்லா அரசிறையில் பதிவு செய்யப்பட்ட 24 சதவீத அதிகரிப்பு பல காரணிகளின் இணைந்த வெளிப்பாட்டால் ஏற்பட்டது.** வரியல்லா அரசிறையின் கூடிய பங்கை பிரதிநிதித்துப்படுத்தும் கட்டணங்கள் மற்றும் விதிப்பனவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் வாடகை வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு இச் செயலாற்றத்துக்கான முக்கிய காரணிகளாக விளங்கின. மேலும், மத்திய வங்கியிலிருந்தான ரூ.8 பில்லியன் இலாப மாற்றல்களும் வரியல்லா அரசிறைச் சேகரிப்பிலான அதிகரிப்பு பங்களிப்புச் செய்தன. எனினும், இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்களிலிருந்தான அரசிறை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

### செலவினம் மற்றும் தேசிய கடன் வழங்கல்

**2008இல் மொத்தச் செலவினம் மற்றும் கடன் வழங்கல் ரூ.996 பில்லியனுக்கு 18 சதவீதத்தால் அதிகரித்தது.** இது எதிர்பார்த்தை விடக் குறைந்தளவு மூலதனச் செலவினத்தின்

வரைபடம் 6.3 அரச நடைமுறைச் செலவினத்தின் உள்ளடக்கம் - 2008




முக்கிய காரணமாக வரவு செலவுத்திட்ட இலக்கான ரூ.1,044 பில்லியனை விட ரூ.45 பில்லியன் குறைவாகக் காணப்பட்டது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மொத்தச் செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கல் 22.6 சதவீதமாக விளங்கியதுடன், இது 2007இல் பதிவு செய்யப்பட்ட 23.5 சதவீதத்தை விடக் குறைவானதாகும்.

**2008இல் மொத்த மீண்டெழும் செலவினம் வரவு செலவுத்திட்ட இலக்கை விஞ்சிய போதிலும் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக தொடர்ந்து வீழ்ச்சியடைந்தது.** பெயரளவு நியதிகளில், மீண்டெழும் செலவினம் ரூ.744 பில்லியனுக்கு 17.8 சதவீதத்தால் அதிகரித்தது. இது மீண்டெழும் செலவினத்தைக் குறைப்பதற்கான முயற்சிகளுக்கு மத்தியிலும் வரவு செலவுத்திட்ட இலக்கைவிட ரூ.31 பில்லியனால் அதிகரித்தது. எனினும், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மீண்டெழும் செலவினம் முன்னைய ஆண்டின் 17.4 சதவீதத்திலிருந்து 16.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**பெயரளவு நியதிகளில் மீண்டெழும் செலவினத்தின் அதிகரிப்பு முக்கியமாக சம்பளங்கள் மற்றும் கூலிகள், ஓய்வூதியக் கொடுப்பனவுகள், வட்டிக் கொடுப்பனவுகள், வளமாக்கி உதவு தொகை, பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் என்பவற்றிலான செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பால் ஏற்பட்டது.** இவ்வாண்டில் பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படைகள் உள்ளிட்ட அரச சேவை மற்றும் மாகாண அரச சேவைகளுக்கு புதிய ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டமை, குறைந்த தரங்களிலுள்ள அரச பணியாளர்களுக்கான வாழ்க்கைச் செலவுப்படியின் அதிகரிப்பு மற்றும் நலத்துறை மற்றும் குறிப்பாக சட்டத்துறையைச் சேர்ந்தோர் உள்ளிட்ட அரச அலுவலர்களுக்கான படிகளின் மீளாய்வு என்பவற்றின் முக்கிய காரணமாக சம்பளங்கள் மற்றும் கூலிகள் மீதான செலவினம் ரூ.239 பில்லியனுக்கு 12 சதவீதத்தால் அதிகரித்தது. 2008 சனவரியிலிருந்து நடைமுறைக்கு வந்த அரச அலுவலர்களால் பயன்படுத்தப்படாத விடுப்புகளுக்குப் பதிலான கொடுப்பனவை முடிவுக்குக் கொண்டு வந்தமை சுமையை ஓரளவிற்குக் குறைத்தது. இதேவேளை, மொத்த மீண்டெழும் செலவினத்தில் சம்பளங்கள் மற்றும் கூலிகள் பங்கு 2007இல் பதிவு செய்யப்பட்ட 34.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 32.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. ஓய்வூதியக் கொடுப்பனவுகளிலான 9 சதவீத அதிகரிப்பு ஓய்வூதியம் பெறுவோருக்கான வாழ்க்கை செலவுப்படியில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் 2008இல் 4,783 ஓய்வூதியம் பெறுவோர் புதிதாகச் சேர்ந்தமையின் தாக்கத்தாலும் பெருமளவில் ஏற்பட்டது. உயர் உள்நாட்டு வட்டி வீதங்களின் முக்கிய காரணமாக வட்டிக் கொடுப்பனவுகள் ரூ.212.5

## அட்டவணை 6.3 செலவினத்தினுடைய பொருளாதாரப் பகுப்பாய்வும் மீள்கொடுப்பனவு கழித்த கடன்வழங்கலும்

| விபரம் | 2007 | 2008 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 2008 தற்காலிக மானவை | 2009 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|
| | ரூ. மில்லியன் | | | |
| **நடைமுறைச் செலவினம்** | **622,758** | **712,894** | **743,710** | **823,511** |
| பொருட்கள் பணிகள் மீதான செலவு | 292,632 | 343,852 | 360,327 | 378,554 |
| இதில் சம்பளங்களும் கூலிகளும் | 214,160 | 233,393 | 239,078 | 268,356 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 182,681 | 209,825 | 212,475 | 250,438 |
| வெளிநாட்டு | 21,311 | 30,000 | 30,277 | 32,000 |
| உள்நாட்டு | 161,370 | 179,825 | 182,198 | 218,438 |
| நடைமுறை மாற்றல்களும் | | | | |
| உதவிக் கொடுப்பனவுகளும் | 147,445 | 159,217 | 170,908 | 194,519 |
| இதில் குடும்ப அலகுகளுக்கும் | | | | |
| ஏனைய துறைகளுக்கும் | 110,910 | 121,546 | 131,342 | 149,062 |
| சமுர்த்தி | 9,200 | 10,850 | 9,995 | 10,850 |
| ஓய்வூதியங்கள் | 68,822 | 73,060 | 74,920 | 86,000 |
| வளமாக்கி உதவிக்கொடுப்பனவு | 11,000 | 15,000 | 6,450 | 25,000 |
| ஏனையவை | 21,888 | 22,636 | 19,977 | 27,212 |
| **மூலதனச் செலவினம்** | **206,161** | **282,894** | **232,607** | **312,383** |
| உண்மைச் சொத்துக்களின் கையேற்பு | 111,510 | 199,905 | 128,946 | 212,513 |
| மூலதன மாற்றல்கள் | 94,651 | 108,075 | 103,661 | 170,941 |
| குறைச் செலவின ஏற்பாடு | - | -25,085 | - | -71,071 |
| **மீள் கொடுப்பனவு கழித்த கடன் வழங்கல்** | **12,684** | **48,400** | **19,809** | **55,778** |
| **மொத்தச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும்** | **841,604** | **1,044,188** | **996,125** | **1,191,671** |
| | மொ.உ.உ. இன் சதவீதமாக | | | |
| **நடைமுறைச் செலவினம்** | **17.4** | **17.1** | **16.9** | **15.8** |
| பொருட்கள் பணிகள் மீதான செலவு | 8.2 | 8.2 | 8.2 | 7.3 |
| இதில் சம்பளங்களும் கூலிகளும் | 6.0 | 5.6 | 5.4 | 5.1 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 5.1 | 5.0 | 4.8 | 4.8 |
| வெளிநாட்டு | 0.6 | 0.7 | 0.7 | 0.6 |
| உள்நாட்டு | 4.5 | 4.3 | 4.1 | 4.2 |
| நடைமுறை மாற்றல்களும் | | | | |
| உதவிக் கொடுப்பனவுகளும் | 4.1 | 3.8 | 3.9 | 3.7 |
| இதில் குடும்ப அலகுகளுக்கும் | | | | |
| ஏனைய துறைகளுக்கும் | 3.1 | 2.9 | 3.0 | 2.9 |
| சமுர்த்தி | 0.3 | 0.3 | 0.2 | 0.2 |
| ஓய்வூதியங்கள் | 1.9 | 1.7 | 1.7 | 1.6 |
| வளமாக்கி உதவிக்கொடுப்பனவு | 0.3 | 0.4 | 0.6 | 0.5 |
| ஏனையவை | 0.6 | 0.5 | 0.5 | 0.5 |
| **மூலதனச் செலவினம்** | **5.8** | **6.8** | **5.3** | **6.0** |
| உண்மைச் சொத்துக்களின் கையேற்பு | 3.1 | 4.8 | 2.9 | 4.1 |
| மூலதன மாற்றல்கள் | 2.6 | 2.6 | 2.4 | 3.3 |
| குறைச் செலவினம் | - | -0.6 | - | -1.4 |
| **மீள் கொடுப்பனவு கழித்த கடன் வழங்கல்** | **0.4** | **1.2** | **0.4** | **1.1** |
| **மொத்தச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும்** | **23.5** | **25.0** | **22.6** | **22.8** |

மூலம் : நிதி திட்டமிடல் அமைச்சு


பில்லியனுக்கு 16 சதவீதத்தால் அதிகரித்தன. பாதுகாப்பு ஆளணிக்கான சம்பளங்கள் மற்றும் கூலிகள் உள்ளிட்ட பாதுகாப்புச் செலவினம் ஆயுதப்படைகளுக்கான புதிய ஆட்சேர்ப்புகள், எரிபொருள் செலவினத்திலான அதிகரிப்பு மற்றும் பாதுகாப்புச் செயற்பாடுகளுடன் தொடர்பான ஏனைய பொருட்கள் மற்றும் பணிகள் மீதான செலவினத்தின் முக்கிய காரணமாக கணிசமான அதிகரிப்பைக் காட்டியது.

**2008இல் நடைமுறை மாற்றல்கள் மற்றும் உதவுதொகைகள் 16 சதவீதத்தால் அதிகரித்தன.** இதில், அரச கூட்டுத்தாபனங்களுக்கான மாற்றல்கள் முக்கியமாக இலங்கை புகையிரத மற்றும் அஞ்சல் திணைக்களத்துக்கான மாற்றல்களில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக 22 சதவீதத்தால் அதிகரித்தது. நிறுவனங்களுக்கான நடைமுறை மாற்றல்களும் 3 சதவீதத்தால் அதிகரித்தன. இதேவேளை, வளமாக்கி உதவுதொகை மீதான செலவினம் 2008இன் முதலரைப்பகுதியில் நிலவிய பன்னாட்டு வளமாக்கியின் உயர் விலைகள் காரணமாக 2007 உடன் ஒப்பிடுகையில் ரூ.26 பில்லியனுக்கு இரு மடங்கிற்கும் கூடியளவில் காணப்பட்டது. சமுர்த்தி நன்மை பெறுவோருக்கான மண்ணெண்ணெய் உதவுதொகை மற்றும் பெருந்தோட்டத் துறைக்கான அரிசி உதவுதொகை, பாடசாலை ஊட்டச்சத்து உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளடக்கப் பரப்பை அதிகரித்தல், மாணவர்களுக்கான உபகாரச் சம்பளம் மற்றும் ஆண்டு 5 புலமைப் பரிசுகளைப் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையிலான அதிகரிப்பு, முக்கியமாக அடிப்படைத் தேவைகள், ஜீவனோபாயங்கள் மற்றும் மீள்குடியமர்த்தல் என்பவற்றை வழங்குதல் என்பவற்றின் பொருட்டு உள்நாட்டில் இடம் பெயர்ந்த ஆட்களுடன் தொடர்பான உயர்ந்த செலவினங்கள் என்பவற்றின் காரணமாக ஏனைய நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் மீதான செலவினமும் 2008இல் 10 சதவீதத்தால் அதிகரித்தது.

**பெயரளவு நியதிகளில் அரச முதலீடு 2008இல் ரூ.264 பில்லியனுக்கு 15 சதவீதத்தால் அதிகரித்தது.** இவ் அதிகரிப்பு முக்கியமாக பல பாரிய உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் அது போல் "கமநெகும" (கிராம அபிவிருத்தி), "மகநெகும" (வீதி அபிவிருத்தி), "கமி திரிய", தென் மாகாண கிராமிய பொருளாதார மேம்பாட்டுச் செயற்றிட்டம், சிறு நீர்ப்பாசன செயற்றிட்டங்களின் புனருத்தாபனம் மற்றும் மாகாணச் சபைகளால் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்றிட்டங்களூடாக மாகாண மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டமையால் ஏற்பட்டது. எனினும், செயலாற்றம் பெரும்பாலும் செயற்றிட்டங்களின் முன்னுரிமைகளைத் தேவைப்படுத்திய வெளிநாட்டு நிதியிடலின் குறைவான உட்பாய்ச்சல் மற்றும் நிதியங்கள் மீதான பகிர்ந்தளிப்பாலும் எதிர்பார்ப்புக்களை விட குறிப்பிடத்தக்களவு குறைவாகக் காணப்பட்டது. இருப்பினும், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மூலதன செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கல் 6.0 சதவீதத்தில் பேணப்பட்டதுடன், இது முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 6.4 சதவீதத்தைவிட சிறிதளவு மட்டும் குறைவானதாகும்.

**முக்கியமாக போக்குவரத்து, தொடர்பூட்டல் மற்றும் மின்வலு மற்றும் நீர் வழங்கல் துறைகளிலான செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தல் காரணமாக பொருளாதாரப் பணிகளிலான அரச முதலீடு 2008இல் தொடர்ந்து அதிகரித்தது.** (சிறப்புக்குறிப்பு 8 ஐப் பார்க்கவும்). இத்துறைகள் மீதான செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூ.169 பில்லியனுக்கு 22 சதவீதத்தால் அதிகரித்தது. இதேவேளை, சமூக சேவைகள் மீதான அரச முதலீடும் நாட்டில் மனிதவளத் தளத்தை மேம்படுத்தும் நோக்கில் நலம் மற்றும் கல்வித் துறைகளுக்கு உயர் முன்னுரிமையை

**வரைபடம் 6.4 தொழிற்பாடுகளின்படி மொத்தச் செலவினம் - 2008**



சிறப்புக்குறிப்பு 8

## அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்: முன்னேற்றம், பிரச்சனைகள் மற்றும் முன்னோக்கிய வழிவகை

'பத்தாண்டு அபிவிருத்திக் கட்டமைப்பு: 2006 - 2016' இல் (பத்தாண்டுத் தொலைநோக்கு) அறிவிக்கப்பட்ட அரசின் பொருளாதாரக் கொள்கை தந்திரோபாயம் நடுத்தர காலத்தில் ஒரு நிலைத்து நிற்கும் பரந்துபட்ட பொருளாதார வளர்ச்சியான 6 - 8 சதவீதத்தினை அடைவதன் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை ஒரு உயர்ந்த மட்டத்திற்கு உயர்த்துவதற்கு எண்ணியுள்ளது. எறிவு செய்யப்பட்ட வளர்ச்சி நடுத்தர காலத்தில் மொ.உ.உற்பத்தியில் ஏறத்தாழ 6 - 8 சதவீத அரச முதலீடு உள்ளடங்கலாக, மொ.உ.உற்பத்தியில் ஏறத்தாழ 30 - 33 சதவீத மொத்த முதலீட்டினை வேண்டி நிற்கின்றது[1]. எதிர்பார்க்கப்பட்ட உயர்ந்த பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு அரச முதலீட்டினை அதிகரிக்க வேண்டியதன் தேவையை அடையாளம் கண்டு நாடு முழுவதிலுமான பொருளாதார அபிவிருத்தியை முன்னேற்றுவதற்கு நவீன உட்கட்டமைப்பினை வழங்குவதை நோக்காக கொண்டு அனைத்தையுமுள்ளடக்கிய அரச முதலீட்டு திட்டமான 'ரண்டொர' எனப்படும் தேசிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை அரசு 2007இல் அறிவித்தது.

### நடைமுறைப்படுத்தவதிலுள்ள முன்னேற்றம்

'ரண்டொர' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பத்தாண்டு காலப்பகுதியில் தேசிய மற்றும் பிராந்திய மட்டங்களிலும் ரூ.1,636 பில்லியன் கொண்ட தொகை பல்வேறு செயற்றிட்டங்களில் முதலீடு செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகைய செயற்றிட்டங்கள் பரந்தளவில் பொருளாதாரப் பணிகள் மற்றும் சமூகப் பணிகளெனும் இரு துறைகளாக வகைப்படுத்தப்பட முடியும்.

போக்குவரத்து, வலு, நீர் வழங்கல், வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனச் செயற்றிட்டங்கள் போன்ற பொருளாதாரப் பணிகளுக்கு மொத்த மதிப்பிடப்பட்ட முதலீட்டில் 85.2 சதவீதத்தினை (ரூ.1,367 பில்லியன்) ஒதுக்கீடு செய்ததன் மூலம் அதியுயர் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. இதில் ஏறத்தாழ 62 சதவீதம் (ரூ.845 பில்லியன்) போக்குவரத்துத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பெருந்தெருக்கள் மற்றும் மேம்பாலங்களின் கட்டுமாணம் பிரயாண நேரத்தையும் எரிபொருள் விரயத்தையும் குறைக்கின்ற வேளையில் கொழும்பை அண்மித்த மற்றும் தலைநகரப் பிரதேசங்களில் வாகன நெரிசலினை குறைப்பதிலும் பெருமளவில் பங்களிப்புச் செய்யும் உட்பகுதிகளை இணைக்கும் வீதிகளினதும் கிராமிய வீதிகளினதும் கட்டுமானம் மற்றும் புனரமைப்பு கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும். இதேவேளை, தெற்காசியாவில் முதன்மையான கடல், வர்த்தகம் மற்றும் வியாபார மையமாக உருவாவதனை நோக்காகக் கொண்டு பல்வேறு துறைமுக அபிவிருத்தி மற்றும் விரிவாக்க செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ரண்டொர நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அடுத்து வரும் பத்தாண்டுகளிற்கு மொத்த முதலீட்டில் ஏறத்தாழ 29 சதவீதம் (ரூ.396 பில்லியன்), வலு மற்றும் நீர் வழங்கல் துறைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்படி, முழுச் சனத்தொகைக்கும் நம்பிக்கையானதும் நீடித்து நிலைத்து நிற்கக் கூடியதுமான மின்சார வழங்கலை மிகக் குறைந்த செலவில் தேவைப்படும் சூழல் பாதுகாப்புக்களுடன் வழங்குவதனை அரசாங்கம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. பாதுகாப்பான குடிநீர் மற்றும் போதுமான சுகாதார வசதிகளை பெற்றுக் கொள்வது ஒரு பொதுவான தேவையாகவும் அடிப்படை மனித உரிமையாகவும் இருப்பதனால் தற்பொழுது மொத்த சனத்தொகையில் 78 சதவீதமாகத் தொடர்ந்துமிருக்கின்ற பாதுகாப்பான குடிநீரின் கிடைப்பனவின் தற்போதைய நிலைமையை மேம்படுத்துவதற்கு அரசு இலக்கிட்டுள்ளது.

சுகாதாரம், கல்வி மற்றும் வீடமைப்பினை முக்கியமாக உள்ளடக்கிய சமூகப் பணிகள் துறைக்கு 'ரண்டொர' நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த முதலீட்டில் 14.4 சதவீதம் (ரூ. 232 பில்லியன்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நாடு முழுவதிலும் கல்விக்கான கிடைப்பனவினையும் கல்வியின் தரத்தையும் பெறுவதனை அதிகரிப்பதன் மூலம் மக்களில் முதலீடு செய்வதற்கான தேவைக்கு அரசு முன்னுரிமை வழங்கியுள்ளது. ஆரோக்கியமான மனிதவளத்தை கட்டியெழுப்புவதற்கும், இலவச சுகாதாரப் பணிகளைப் பாதுகாத்து ஒவ்வொரு குடிமகனும் அதனுடன் தொடர்புபட்ட அனுகூலங்களைப் பெற்றுக் கொள்வதனை உறுதிப்படுத்துவதன் மூலம் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அரசின் சுகாதாரக் கொள்கை எதிர்பார்க்கிறது. இதற்கு மேலாக, ஆயுதப்படைகள், சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், உள்நாட்டில் புலம்பெயர்ந்த மக்கள், மலையகத் தொழிலாளர், குறைந்த வசதியுடைய நகரக் குடும்பங்கள் மற்றும் மீன்பிடிச் சமூகம் போன்ற தேவையைக் கொண்டுள்ள தெரிவு செய்யப்பட்ட சமூகங்களுக்கான வீடுகளின் கட்டுமாணத்தை அரசு தொடங்கியுள்ளது. தெரிவு செய்யப்பட்ட பாரிய அபிவிருத்தி செயற்றிட்டங்களின் விபரங்கள் சி.கு. அட்டவணை 8.1இல் வழங்கப்பட்டுள்ளன.

### நிதியியல் முன்னேற்றம்: 2005 - 2008

2005 - 2008 காலப்பகுதியில் மொ.உ.உற்பத்தி சதவீதமாக மொத்த அரச முதலீடு ஏறத்தாழ 6 சதவீதமாக (சி.கு. அட்டவணை 8.2) 2002 - 2004 வரையான காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட தாழ்ந்த மட்டமான 4.5 - 5.0 சதவீதத்துடன் ஒப்பிடுமிடத்து ஒப்பீட்டளவில் திருப்திகரமான செயலாற்றமாகவுள்ளது. பல்வேறு இறை வரையறைகளும் அரசாங்கத்திற்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள குறுகிய இறை இடைவெளியும் கொடுக்கப்பட்டுள்ள நிலையில் அரச முதலீட்டினை இந்த மட்டத்தில் பேணுவது பாராட்டுவதற்குரியது. எனினும், வளர்ச்சி உத்வேகத்தை தக்க வைத்துக் கொள்வதற்கும் தனியார் முதலீட்டுக்கு துணை புரிந்து வசதியளிப்பதற்கும் பொருளாதார வளர்ச்சியின் விரும்பத்தக்க மட்டத்தை அடைவதற்கும் அரச முதலீடு மேலும் அதிகரிக்கப்பட வேண்டியது அவசியமாகும். 2006 - 2008 காலப்பகுதியில் விசேடமாக போக்குவரத்துத்துறை உள்ளிட்ட பொருளாதாரப் பணிகள் மீதான, அரச முதலீடுகள் கணிசமானளவு அதிகரித்தமை ஊக்கமளிக்கின்றது. வலு மற்றும் நீர் வழங்கல் துறைகள் மீதான முதலீடுகள் அதியுயர் அதிகரிப்பை பதிவு செய்துள்ள வேளையில் கல்வி மீதான முதலீடும் கணிசமானளவு வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. மொத்த அரச முதலீட்டில் மாகாண சபைகளினூடாக பிரதேச அபிவிருத்தியிலான முதலீடு 2005 இற்குப்பின் 2008இல் ரூ. 24.6 பில்லியனுக்கு 77.6 சதவீதத்தில் அதிகரித்தது.

### பிரச்சனைகளும் முன்னோக்கிய பாதையும்

அரசின் புதுப்பிக்கப்பட்ட முயற்சியின் காரணமாக அண்மிய காலத்தில் அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்திலான உற்சாகமூட்டும் சாதனைகளுக்கு மத்தியிலும் நடைமுறைப்படுத்தல்

[1] நீண்டகாலத்தில், பத்தாண்டுத் தொலைநோக்கு 8-10 சதவீதமொனதொரு பொருளாதார வளர்ச்சியை எதிர்பார்ப்பதுடன் அது மொ.உ.உ.இல் 33-36 சதவீத வருடாந்த மொத்த முதலீட்டை வேண்டிநிற்கும்.

## அட்டவணை சி.கு 8.1
## இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட பாரிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்கள்

| செயற்றிட்டம் | மொத்த மதிப்பிடப்பட்ட செலவு (ரூ.மில்.) | நிதியிடல் மூலம் | முடிவுறுத்த எதிர்பார்க்கப்படும் ஆண்டு | குறிப்புக்கள் |
|---|---|---|---|---|
| தெற்கு விரைவு பாதை | 67,195 | ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பன்னாட்டு ஒத்துழைப்புக்கான யப்பான் வங்கி | 2011 | கொட்டாவையிலிருந்து மாத்தறை வரை 4 ஒழுங்கைகளையும் 11 மேம்பாலங்களையும் கொண்ட 128 கி.மீ. நெடுஞ்சாலையின் **கட்டுமாணச் செயற்றிட்டத்தின் 50 சதவீதம் பூர்த்தியடைந்துள்ளது.** |
| அம்பாந்தோட்டை துறைமுகம் | 42,212 | சீனாவின் எக்ஸிம் வங்கி | 2011 | 1 கி.மீற்றர் நீளமான அலைதாங்கி இரண்டு கப்பற் தரிப்பிடமும், ஒரு அணுகு கால்வாயும் மற்றும் 16 மீற்றர் வரை துளையிடப்பட்ட கப்பற் துறைமுக வடிநிலத்தையும் கொண்ட அலைதாங்கியின் நிர்மாணம். **நீருக்குக் கீழான அணையின் நிர்மாணம் மற்றும் அலைதாங்கி நிர்மாணத்தின் அரைவாசியும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.** |
| மேல் கொத்மலை நீர்மின் செயற்றிட்டம் | 38,219 | பன்னாட்டு ஒத்துழைப்புக்கான யப்பான் வங்கி | 2011 | 150 மெ.வோட் இயலளவைக் கொண்ட குறைந்த செலவினைக் கொண்ட வலு பொறியை ஸ்தாபித்தல். **கட்டுமாணம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.** |
| நுரைச்சோலை நிலக்கரி வலு செயற்றிட்டம் | 51,550 | சீனாவின் எக்ஸிம் வங்கி | 2011 | தேசிய வழங்கல் தொகுதிக்கு முதற்கட்டத்தில் 300 மெ.வாட்டையும் இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டங்களில் 600 மெ.வாட்டையும் சேர்த்தல். **வலு, பொறி அத்திவாரத்தின் கட்டுமாணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.** |
| கொழும்பு துறைமுக விஸ்தரிப்பு | 85,910 | ஆசிய அபிவிருத்தி வங்கி | 2012 | 570 மீற்றர் அகலமான அணுகு கால்வாய், புதிய பாரிய நீருக்குக் கீழான அணை, புதிய பாரிய அலைதாங்கி, சிறிய அலைதாங்கி மற்றும் மூன்று கொள்கலன் முனைக்கோடிகள் போன்றவற்றுடன் 285 எக்டேயர் பரப்பிலானதொரு புதிய கப்பற்துறைமுக வடிநிலத்தின் கட்டுமாணம். **பாரிய அலைதாங்கியின் கட்டுமாணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.** |
| திருகோணமலை நிலக்கரி வலுப் பொறி | 60,000 | இந்தியா இலங்கை கூட்டு முயற்சி | 2012 | குறைந்த செலவில் மின்சாரத்தை உருவாக்கும் 500 மெ.வாட் வலுப் பொறியின் கட்டுமாணம். **அமைவிடம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.** |
| யாழ்ப்பாண நீர் வழங்கல் செயற்றிட்டம் | 11,800 | ஆசிய அபிவிருத்தி வங்கி | 2012 | யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஏறத்தாழ 250,000 குடியிருப்பாளருக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்காக நீர் சுத்திகரிப்பு பொறி மற்றும் சேமிப்பு நீர்த்தேக்கத்தின் கட்டுமாணம். **சாத்திய ஆராய்வு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.** |
| கொழும்பு - கட்டுநாயக்கா விரைவு பாதை | 27,000 | சீனாவின் எக்ஸிம் வங்கி | 2012 | கொழும்பிலிருந்து கட்டுநாயக்க விமானநிலையம் வரை 5 மேம்பாலங்களுடன் 25 கி.மீ. நான்கு ஒழுங்கைகளுடனான விரைவு பாதையின் கட்டுமாணம். **காணிப் பெறுகையும் முக்கிய பயன்பாடுகளை அப்புறப்படுத்துகின்ற வேலைகள் நடைமுறையிலுள்ளன.** |
| தெற்கு சர்வதேச விமான நிலையம் | 19,250 | உள்நாட்டு நிதி மற்றும் அரச தனியார் பங்குடமை | 2013 | 4 கி.மீ. ஓடுபாதை மற்றும் விமானத் தரிப்பிடப் பரப்பின் கட்டுமானம் **நில அளவை வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுளளன.** |
| மொறகாகந்த மற்றும் களுகங்கை அபிவிருத்தி | 48,950 | பன்னாட்டு ஒத்துழைப்புக்கான யப்பான் வங்கி மற்றும் குவைத் | 2013 | பயிர்ச் செய்யும் நிலங்களை 3,000 எக்டேயரால் அதிகரித்தல் மற்றும் மாத்தளை, அநுராதபுரம், திருகோணமலை மற்றும் பொலனறுவை மாவட்டங்களுக்கு வீட்டு மற்றும் கைத்தொழில் நீர் வழங்கல். **இடம்பெயர்ந்த ஆட்களுக்கான காணிக் கொள்வனவு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் நிர்மாணம் போன்ற ஆரம்ப வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.** |
| கல்பிட்டி உல்லாசப் பயணிகள் வலயம் | 15,000 | முதலீட்டு வாய்ப்பு | 2010 | 4 இலிருந்து 5 நட்சத்திர தர வசதிகளுடன் 3,000 அறைகள் உலகத் தரத்திலான படகோட்டப் போட்டி, நீரின் கீழான உலகத்தின் கட்டுமானம் போன்றவை. **காணிக் கொள்வனவுக்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்று வருகின்றன.** |
| தம்புள்ள பெரும்பாக அபிவிருத்தி | 39,000 | உள்நாட்டு நிதியங்கள் மற்றும் முதலீட்டு வாய்ப்பு | 2016 | தம்புள்ளையில் நகர மையங்கள், கைத்தொழில் மையங்கள் மற்றும் நிருவாக கட்டடத்தொகுதியின் அபிவிருத்தி. **நிருவாக கட்டடத்தொகுதியின் கட்டுமானம் பூர்த்தியடைந்துள்ளது (கட்டம் 1)** |

செய்முறையை விரைவுபடுத்துவதற்கான பல்வேறு பிரச்சனைகள் தொடர்ந்தும் தீர்க்கப்பட வேண்டி இருக்கிறது. இவை காணிகளை பெற்றுக் கொள்ளல், நட்ட ஈடு மற்றும் குடியேற்றத்திற்கான உயர்ந்த செலவு, ஒப்பந்தக்காரர்களின் இயலளவு வரையறைகள், நிருவாக மற்றும் கொள்வனவுத் தாமதங்கள், உள்நாட்டு இணைக்கிணை நிதியங்களை விடுவிப்பதிலுள்ள பிரச்சனைகள், பலவீனமான மதிப்பீட்டு மற்றும் கண்காணிப்பு முறைமைகள் தொடர்பான பிரச்சனைகளை உள்ளடக்குகின்றன. எனவே, செலவு அதிகரிப்பை குறைப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளை அடைவதற்கும் திட்டமிட்ட உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களை குறித்துரைக்கப்பட்ட கால இடைவெளிகளில் பூர்த்தி செய்வதற்கு நடைமுறைப்படுத்தல் செய்முறையை கண்காணிப்பதற்காக முறைமையை வலுப்படுத்துவது அவசியமாகின்றது.

**அட்டவணை சி.கு 8.2**

**அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம்: 2005 - 2008**

| விடயம் | 2005 | 2006 | 2007 | 2008 தற்காலிகம் |
|---|---|---|---|---|
| ரூபா பில்லியன் | | | | |
| மொத்த அரச முதலீடு | 148.6 | 177.4 | 229.3 | 263.9 |
| இதில் பொருளாதார பணிகள் | 77.5 | 106.8 | 141.2 | 168.9 |
| இதில் போக்குவரத்தும் தொடர்பாடலும் | 31.8 | 38.0 | 51.0 | 82.9 |
| வலுவும் நீர்வழங்கலும் | 19.2 | 26.4 | 47.9 | 48.8 |
| வேளாண்மையும் நீர்ப்பாசனமும் | 10.0 | 12.6 | 14.7 | 17.7 |
| சமூகப் பணிகள் | 36.0 | 48.4 | 55.0 | 60.2 |
| இதில் கல்வி | 12.9 | 17.2 | 19.9 | 22.9 |
| சுகதாரம் | 10.7 | 14.0 | 17.0 | 18.7 |
| வீடமைப்பு | 3.7 | 4.0 | 4.5 | 4.8 |
| மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக | | | | |
| மொத்த அரச முதலீடு | 6.3 | 6.0 | 6.4 | 6.0 |
| இதில் பொருளாதார பணிகள் | 3.3 | 3.6 | 3.9 | 3.8 |
| சமூகப் பணிகள் | 1.5 | 1.6 | 1.5 | 1.4 |

மூலம்: நிதி திட்டமிடல் அமைச்சு

உலக நிதியியல் நெருக்கடியினூடாக உருவாக்கப்பட்ட எதிர்பார்க்கப்பட்டதை விட தாழ்ந்ததான உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வெளிநாட்டு வர்த்தக நிதியிடலினூடான நடைமுறைப்படுத்துதலின் சாத்தியமான மெதுவடைதல் முக்கிய சவால்களிலொன்றாகும். இது அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றத்தை மெதுவடையச் செய்யும். இது இருபுடை மற்றும் பல்புடை அபிவிருத்தியின் பங்காளர்களிடமிருந்து ஏற்கெனவே உறுதியளிக்கப்பட்ட சலுகை அடிப்படையிலான நிதியிடலைப் பகிர்ந்தளிப்பதற்கான ஒவ்வொரு முயற்சியையும் மேற்கொள்வதைத் தேவைப்படுத்துகிறது.

குறிப்பாக 'நகெனஹிர நவோதய' (கிழக்கின் உதயம்) மற்றும் 'உதுரு வசந்தய' (வடக்கின் வசந்தம்) நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் வட மாகாணத்தில் மீள்குடியேற்றம், புனரமைப்பு மற்றும் மீள்கட்டமைப்பு வேலைகளை தொடர்வதற்கும் கிழக்கு மாகாணத்தின் தொடர்ச்சியான விரைவான அபிவிருத்திக்கும் பாரிய தொகை தாங்க வேண்டியுள்ளது. இது இவ்விரு மாகாணங்களின் பொருளாதார செயற்பாடுகளின் புத்துயிராக்கத்தை தீவிரமடையச் செய்வதில் முக்கிய விடயமாகவிருக்கும்.

உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களிற்கு நிதியிடுவதற்கான ஏனைய மாற்று முறைகளை அறிமுகம் செய்வதும் மேம்படுத்துவதும் அடுத்து முக்கியமாக கவனத்திலெடுக்கப்பட வேண்டிய விடயமாகும். இந்த வகையில், அரச தனியார் பங்குடைமை உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் உற்சாகமளிக்கப்படும். இது அரசின் வரவு செலவுத்திட்டத்திலான சுமையை கணிசமானளவு குறைப்பதற்கு துணைபுரியும்.

வழங்கி ரூ.55 பில்லியனிலிருந்து ரூ.60 பில்லியனுக்கு 9.5 சதவீதத்தால் அதிகரித்தது. இதன்படி, கல்வியிலான முதலீடு உட்கட்டமைப்பைத் தரமுயர்த்தல், ஆரம்பப் பாடசாலைகளிடையே ஏற்றத்தாழ்வை ஒழித்தல், மாணவர்களிடையே தகவல் தொழில்நுட்ப அறிவை விருத்தி செய்தல் என்பவற்றை நோக்கி நெறிப்படுத்தப்பட்டது. நலக் கட்டமைப்பு மற்றும் வசதிகளை அபிவிருத்தி செய்யும் அதேவேளை பெருந்தோட்ட மருத்துவமனைகளின் மேம்பாட்டினூடாக குறிப்பாக வசதி குறைந்த பிரதேசங்களில் பாதிக்கப்படக்கூடிய மக்களில் கவனம் செலுத்தி நலக் கவனிப்பை அடைவதை மேம்படுத்துவதை நோக்கிய நலத்துறையில் அரச முதலீடு நெறிப்படுத்தப்பட்டது.

## முக்கிய இறை நிலுவைகள்

**2008இல் திரண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்டதைப் போன்றே மொ.உ.உற்பத்தியின் (ரூ.340.9 பில்லியன்) 7.7 சதவீதமாக மாறாதிருந்தது.** எனினும், ஆரம்ப வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 7.0 சதவீதத்திற்கும் கணிசமானளவில் கூடுதலாக விளங்கியது. அரசின் அரசிறையிலான குறிப்பிடத்தக்க பற்றாக்குறை, இவ்வாண்டில் மூலதனச் செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கலிலான வீழ்ச்சியை விட கூடுதலாகக் காணப்பட்டளவுக்கு அதிகமான மீண்டெழும் செலவினம் இவ் அதிகரிப்புக்கான பிரதான காரணங்களாகும். அரசின் குறைச் சேமிப்புக்களை எடுத்துக்காட்டும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2007இல் பதிவு செய்யப்பட்ட 1.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொ.உ.உற்பத்தியின் 2.0 சதவீதத்திற்கு அதிகரித்ததுடன் ஆரம்ப வரவு செலவுத்திட்டத்தில் 0.9 சதவீத மிகை எதிர்பார்க்கப்படுகிறது. தேறிய வட்டிக் கொடுப்பனவுகளின் மொத்தப் பற்றாக்குறையான முதன்மைப் பற்றாக்குறை 2007இல் பதிவு செய்யப்பட்ட 2.6 சதவீதத்திலிருந்து மொ.உ.உற்பத்தியின் 2.9 சதவீதத்திற்கு அதிகரித்ததுடன் ஆரம்ப வரவு செலவுத்திட்டத்தில் 2 சதவீதம் எதிர்பார்க்கப்படுகிறது. அரசிறையிலான வளர்ச்சியை விஞ்சிச் சென்ற வட்டியல்லா மீண்டெழும் செலவினத்திலான உயர் வளர்ச்சி உயர் முதன்மைப் பற்றாக்குறைக்கான பிரதான காரணமாகும்.

## வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையை நிதியிடல்

**2008இல் வெளிநாட்டு மூலவளங்களின் தேறிய உட்பாய்ச்சல் கணிசமானளவில் மெதுவடைந்தமையால் ரூ.340.9 பில்லியன் கொண்ட திரண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை உள்நாட்டு மூலவளங்களூடாக பெருமளவில் நிதியிடப்பட்டது.** மொத்த தேறிய உள்நாட்டு நிதியிடல்கள், ஆரம்ப மதிப்பீடான ரூ.154.8 பில்லியனுடனும் 2007இல் பதிவு செய்யப்பட்ட ரூ.127.7 பில்லியன் கொண்ட தொடர்பான எண்தொகையுடன் ஒப்பிடுகையில் ரூ.310.0 பில்லியனாக விளங்கியது. மொத்த தேறிய வெளிநாட்டு நிதியிடல் ஆரம்ப மதிப்பீடான ரூ.138.6 பில்லியனுடனும் முன்னைய ஆண்டின் ரூ.131.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.26.6 பில்லியனாக மட்டும் விளங்கியது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக 2008இல் தேறிய உள்நாட்டு

**அட்டவணை 6.4 செலவினத்தின் தொழிற்பாட்டுப் பகுப்பு**

| விடயம் | 2007 | 2008 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 2008 தற்காலிக மானவை | 2009 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|
| | ரூ. மில்லியன் | | | |
| **மொத்த நடைமுறைச் செலவினம்** | **622,758** | **712,894** | **743,710** | **823,511** |
| அரச பொதுப் பணிகள் | 162,102 | 179,548 | 207,348 | 218,598 |
| பொது நிருவாகம் | 31,481 | 38,719 | 36,150 | 43,213 |
| பாதுகாப்பு | 101,856 | 108,086 | 134,710 | 134,260 |
| பொதுமக்கள் ஒழுங்கு, பாதுகாப்பு | 28,765 | 32,743 | 36,487 | 41,125 |
| சமூகப் பணிகள் | 226,271 | 245,494 | 240,768 | 266,168 |
| கல்வி | 72,592 | 78,476 | 77,141 | 81,827 |
| நலம் | 51,741 | 56,537 | 55,874 | 60,726 |
| நலன்புரி | 91,747 | 97,315 | 94,789 | 109,878 |
| சமூகப் பணிகள் | 10,191 | 13,166 | 12,963 | 13,736 |
| பொருளாதாரப் பணிகள் | 49,573 | 60,559 | 80,303 | 84,148 |
| வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனம் | 22,849 | 28,177 | 41,579 | 41,566 |
| வலு மற்றும் நீர் வழங்கல | 3,647 | 3,872 | 3,323 | 4,154 |
| போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் | 18,983 | 22,306 | 29,587 | 30,065 |
| ஏனையவை | 4,094 | 6,204 | 5,814 | 8,363 |
| ஏனையவை | 184,812 | 227,293 | 215,291 | 254,597 |
| இதில் வட்டி செலுத்துகை | 182,681 | 209,825 | 212,475 | 250,438 |
| **மூலதனச் செலவினம், கடன்வழங்கல்** | **229,273** | **335,672** | **263,860** | **370,765** |
| அரச பொதுப் பணிகள் | 32,143 | 40,088 | 34,404 | 39,693 |
| பொது நிருவாகம் | 28,438 | 34,612 | 29,675 | 36,685 |
| பொதுமக்கள் ஒழுங்கு, பாதுகாப்பு | 3,705 | 5,476 | 4,728 | 3,008 |
| சமூகப் பணிகள் | 54,986 | 75,835 | 60,236 | 97,738 |
| கல்வி | 19,948 | 31,207 | 22,942 | 36,269 |
| நலம் | 16,961 | 23,309 | 18,674 | 25,953 |
| வீடமைப்பு | 4,481 | 7,190 | 4,826 | 9,659 |
| சமூகப் பணிகள் | 13,596 | 14,129 | 13,794 | 25,857 |
| பொருளாதாரப் பணிகள் | 141,244 | 244,075 | 168,879 | 304,054 |
| வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனம் | 14,736 | 26,156 | 17,681 | 34,255 |
| வலு மற்றும் நீர் வழங்கல் | 47,850 | 79,201 | 48,783 | 80,326 |
| போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் | 50,995 | 100,170 | 82,916 | 148,934 |
| ஏனையவை | 27,663 | 38,548 | 19,499 | 40,539 |
| ஏனையவை | 900 | 760 | 341 | 350 |
| குறைச் செலவினம் | - | -25,085 | - | -71,071 |
| **மொத்தச் செலவினம், கடன்வழங்கல்** | **852,031** | **1,048,565** | **1,007,569** | **1,194,276** |
| மொ. உ. உற்பத்தியின் சதவீதமாக | | | | |
| அரச பொதுப்பணிகள் | 5.4 | 5.3 | 5.5 | 5.0 |
| சமூகப் பணிகள் | 7.9 | 7.7 | 6.8 | 7.0 |
| பொருளாதாரப் பணிகள் | 5.3 | 7.3 | 5.6 | 7.4 |
| ஏனையவை | 5.2 | 5.5 | 4.9 | 4.9 |
| இதில் செலுத்தப்பட்ட வட்டி | 5.1 | 5.0 | 4.8 | 4.8 |
| **மொத்தச் செலவினம், கடன்வழங்கல்** | **23.8** | **25.1** | **22.8** | **22.9** |


மூலம் : நிதி திட்டமிடல் அமைச்சு

நிதியிடல் 2007இன் 3.6 சதவீதத்திலிருந்து 7.0 சதவீதத்திற்கு கணிசமானளவில் அதிகரித்திருக்கையில் தேறிய வெளிநாட்டு நிதியிடல் முன்னைய ஆண்டில் 3.7 சதவீதம் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட 3.3 சதவீதத்திலிருந்து 0.6 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த அரச செலவினம் தொடர்பாக தேறிய கடன்பாடுகளின் விகிதம் என அளவிடப்பட்ட படுகடன் தங்கியிருத்தல் விகிதம் 2007இன் 29.2 சதவீதத்திலிருந்து 2008இல் 31 சதவீதத்திற்கு அதிகரித்தது.

**வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை நிதியிடுவதற்கு வெளிநாட்டு மூலவளங்களின் தேறிய உட்பாய்ச்சல் 2008இல் கணிசமானளவில் குறைவாக விளங்கியதுடன் இறுதி வரவு செலவுத்திட்ட வெளிப்பாட்டிலான மொத்த மூலவள இடைவெளியின் 8 சதவீதத்தை நிதியிடுவதற்கு மட்டுமே பங்களிப்புச் செய்தது.** இவ்வாண்டின் பிற்பகுதியில் தீவிரமடைந்த உலகளாவிய நிதியியல் குழப்பநிலை திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளிலான வெளிநாட்டு முதலீடுகளின் தேறிய வெளிப்பாய்ச்சலை விளைவித்ததுடன் எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாடுகளைத் திரட்டுவதற்கு அரசை அனுமதிக்கவில்லை. இக் காரணங்கள் குறைந்த அரசிறைச் சேகரிப்பு மற்றும் அளவுக்கதிகமான மீண்டெழும் செலவினம் காரணமாக அதிகரிக்கப்பட்ட கடன்பாட்டுத் தேவைப்பாட்டுடன் இணைந்து உள்நாட்டு நிதியிடலை கூடியளவு நோக்கிய கடன்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்கு நகர்வதற்கு அரசைத் தேவைப்படுத்தியது. இத்துடன், இணைக்கிணை நிதியங்களின் பற்றாக்குறையால் விளைவிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் முன்னுரிமை காரணமாக அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்திலான சார்பு ரீதியிலான மெதுவான முன்னேற்றமும் வெளிநாட்டு சலுகை நிதியிடலின் பகிர்ந்தளிப்பின் மெதுவடைவையும் பாதித்தது. இதன்படி மொத்த திண்ட வெளிநாட்டு சலுகை ரீதியிலான கடன்பாடுகள் 2007இன் ரூ.137 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.98.5 பில்லியனாக மட்டுமே காணப்பட்டது. மொத்த வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாடுகள் ரூ.16.2 பில்லியனாக (ஐ.அ.டொலர் 150 மில்லியன்) மட்டுமே விளங்கின. இவ்வாண்டில், திறைசேரி முறிகளில் வெளிநாட்டு முதலீட்டின் வெளிப்பாய்ச்சல்கள் ரூ.32.5 பில்லியனாக (ஐ.அ.டொலர் 300.5 மில்லியன்) விளங்கின. இதேவேளை, 2008இல் பெறப்பட்ட வெளிநாட்டுக் கொடைகளின் அளவு பன்னாட்டு நிதியியல் நிபந்தனைகளின் அழுத்தத்திற்கு மத்தியிலும் சார்பு ரீதியில் ரூ.30.3 பில்லியனாக (ஐ.அ.டொலர் 280 மில்லியன்) உயர்ந்தளவில் காணப்பட்டது.

**பற்றாக்குறையை நிதியிடுவதில் திரண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையின் கிட்டத்தட்ட 91 சதவீதம் அல்லது ரூ.310 பில்லியன் முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 46 சதவீதங்களுடன் ஒப்பிடுகையில் 2008இல் உள்நாட்டு மூலங்களாகத் திரட்டப்பட்டது.** தேறிய உள்நாட்டு நிதியிடலில் வங்கியல்லாத்துறைக் கடன்பாடுகளின் பங்கு வங்கியல்லாத்துறையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள மட்டுப்படுத்தப்பட்ட மூலவளங்கள் அரசை வங்கித்தொழில் முறைமையிலிருந்து கூடிய அளவு கடன்பெறுவதை அரசைத் தேவைப்படுத்தியமையால் 2007இல் பதிவு செய்யப்பட்ட 88 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2008இல் 37 சதவீதத்திற்கு வீழ்ச்சயடைந்தது. ஊழியர் சேம நிதியம் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி என்பன வங்கியல்லாத்துறையில் பிரதான நிறுவன ரீதியிலான முதலீட்டாளர்களாக தொடர்ந்து விளங்கியன.

**வரைபடம் 6.5 பற்றாக்குறை நிதியிடல் (மொ.உ.உ.இன் சதவீதமாக)**



**அட்டவணை 6.5** **உள்நாட்டு நிதியிடல் மூலங்கள்**

ரூ. பில்லியன்

| விடயம் | 2005 | 2006 | 2007 | 2008 தற்காலிக மானவை |
|---|---|---|---|---|
| **கருவிகளின் படி** | **123.6** | **163.8** | **127.7** | **310.0** |
| திறைசேரி முறிகள் (அ) | 108.1 | 97.4 | 52.8 | 192.4 |
| திறைசேரி உண்டியல்கள் (ஆ) | -9.4 | 20.3 | 37.1 | 69.8 |
| ரூபாக் கடன்கள | -24.2 | -23.8 | 10.3 | -1.5 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 0.0 | 34.3 | 23.6 | 65.5 |
| மத்திய வங்கி தற்காலிக முற்பணங்கள் | 4.9 | 9.3 | 11.7 | 15.6 |
| ஏனையவை | 44.2 | 26.3 | -7.8 | -31.8 |
| **மூலங்களின் படி** | **123.6** | **163.8** | **127.7** | **310.0** |
| வங்கி | 26.2 | 80.0 | 15.8 | 195.2 |
| வங்கியல்லா | 97.4 | 83.8 | 112.0 | 114.8 |

(அ) 2007இலும் 2008இலும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகள் நீங்கலாக

(ஆ) 2008இல் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா குறித்துரைக்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் நீங்கலாக

மூலங்கள் : இலங்கை மத்திய வங்கி
நிதி திட்டமிடல் அமைச்சு

**வங்கித்தொழில் முறைமையிலிருந்தான அரச கடன்பாடுகள் 2008இல் ரூ.195 பில்லியனுக்கு (செலாவணி வீத மாறுபாட்டின் பெறுமதித் தாக்கம் உள்ளடங்கலாக) கணிசமானளவில் அதிகரித்தது.** இதற்கு முரணாக, 2008இற்கான ஆரம்ப மதிப்பீட்டில் வங்கி நிதியிடல் ரூ.9 பில்லியனாக விளங்குகையில் இது 2007இல் ரூ.15.8 பில்லியனாக விளங்கியது. மொத்த தேறிய உள்நாட்டு நிதியிடலில் வங்கி நிதியிடல் 2007இல் பதிவு செய்யப்பட்ட 12 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 63 சதவீதத்திற்கு வகை கூறியது. 2008ல் வங்கித்தொழில் முறையிலிருந்தான மொத்த தேறிய கடன்பாடுகள் மத்திய வங்கியிலிருந்தான ரூ.118.4 பில்லியனையும் வர்த்தக வங்கிகளிலிருந்தான ரூ.76.8 பில்லியனையும் உள்ளடக்கியிருந்தன.


**தேறிய உள்நாட்டு நிதியிடலின் பெரும்பாலானவை 2008இல் கருவிகளை அடிப்படையாகக் கொண்ட கடன்பாடுகளூடாக மேற்கொள்ளப்பட்டது.** படுகடன் கருவிகளூடான தேறிய கடன்பாடுகள் முன்னைய ஆண்டின் ரூ.123.8 பில்லியனிலிருந்து ரூ.326.2 பில்லியனுக்கு அதிகரித்தன. இது திறைசேரி முறிகள் (ரூ.192.4 பில்லியன்), திறைசேரி உண்டியல்கள் (ரூ.69.8 பில்லியன்), இலங்கை அபிவிருத்தி முறிகள் (ரூ.65.5 பில்லியன்) மற்றும் ரூபாக் கடன்களின் மீள்கொடுப்பனவு (ரூ.1.5 பில்லியன்) என்பவற்றிலிருந்தான கடன்பாடுகளை உள்ளடக்கியிருந்தது. கடன்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கருவியின் முதிர்ச்சி அமைப்பு கூடியளவிற்கு குறுகிய மற்றும் நடுத்தர முடிவையுடைய அமைப்பை நோக்கிக் காணப்பட்டது. 2007 இலிருந்து அனுபவிக்கப்பட்ட உயர் பணவீக்கத்துடன் இணங்கிச் செல்லும் விதத்தில் உள்நாட்டு வட்டி வீதங்கள் 2008இல் சார்பு ரீதியில் உயர்ந்து விளங்கியமையால் அரசு படுகடன் கருவிகளை நீண்ட காலத்திற்கு வழங்குவதைவிட அத்தகைய முதிர்ச்சிக் காலங்களுக்கு வழங்க வேண்டியிருந்தது. மொத்தத் தேறிய உள்நாட்டு கருவியல்லாக் கடன்பாடுகளில் ரூ.16.2 பில்லியன் கொண்ட மீள்கொடுப்பனவு காணப்பட்டது.

**வரவு செலவுத்திட்ட நிதியிடலுக்காக அரசின் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுக் கடன்பாடுகள் 2008இல் ஐ.அ.டொலர் 74.9 மில்லியனால் (ரூ.8.1 பில்லியன்) அதிகரித்தன.** இவ்வாண்டில், கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளின் மொத்தக் கடன்பாடுகள் ஐ.அ.டொலர் 75 மில்லியனாக விளங்குகையில் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்தான ஐ.அ.டொலர் 593 மில்லியன் பெறுமதியான கடன்பாடுகளை இலங்கை அபிவிருத்தி முறிகளுக்கு மாற்றல் செய்தல் உள்ளிட்ட ஐ.அ.டொலர் 608.5 மில்லியன் மீள்கொடுப்பனவு காணப்படுகிறது. இதன் விளைவாக, கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளுக்கு ஐ.அ.டொலர் 533.5 மில்லியன் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவு காணப்படுகிறது. இத்துடன், கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளின் முதிர்ச்சியடையும் கடன்களில் சில மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்பட்டது. 2008இல் இலங்கை அபிவிருத்தி முறிகளூடான மொத்தத் தேறிய கடன்பாடுகள் ஐ.அ.டொலர் 608.4 மில்லியனாக விளங்கின. இது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்தான கடன்பாடுகளை மாற்றுவதற்கு வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 593 மில்லியன் பெறுமதியான இலங்கை அபிவிருத்தி முறிகள் உள்ளிட்ட ஐ.அ.டொலர் 928 மில்லியன் கொண்ட மொத்தக் கடன்பாடுகளையும் ஐ.அ.டொலர் 320 மில்லியன் கொண்ட மீள்கொடுப்பனவுகளையும் உள்ளடக்கியிருந்தது.

**வரவு செலவுத்திட்ட நிதியிடலுக்கான வெளிநாட்டுக் கடன்களின் மொத்தப் பெறுகை முக்கியமாக எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாடுகளின் பெறுகை கிடைக்காமையால் 2008இல் வீழ்ச்சியடைந்தது.** பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த வெளிநாட்டுக் கடன்கள் முன்னைய ஆண்டின் ரூ.193.7 பில்லியனுடன் (ஐ.அ.டொலர் 1,751 மில்லியன்) ஒப்பிடுகையில் ரூ.129.6 பில்லியனாக (ஐ.அ.டொலர் 1,197 மில்லியன்) விளங்கியது. இச் செயற்றிட்டத்தின் பிரதான கடன் வழங்குநர்களாக தொடர்ந்தும் யப்பான், பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன விளங்கி மொத்த செயற்றிட்டக் கடன்களின் முறையே 25 சதவீதம், 9 சதவீதம் மற்றும் 23 சதவீதத்திற்கு வகை கூறின. வெளிநாட்டுக் கடன்களின் மொத்தப் பகிர்ந்தளிப்புக்கள் 2008இல் ரூ.16.2 பில்லியன் (ஐ.அ.டொலர் 150 மில்லியன்) வெளிநாட்டு வர்த்தகக் கடனையும் ரூ.15 பில்லியன் (ஐ.அ.டொலர் 138.2 மில்லியன்) திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளிலான மொத்த வெளிநாட்டு முதலீட்டையும் உள்ளடக்கியிருந்தது.

**தேறிய வெளிநாட்டு நிதியிடல் 2008இல் குறிப்பிடத்தக்களவில் குறைவாகக் காணப்பட்டது.** மொத்தப் பற்றாக்குறையை நிதியிடலில், தேறிய வெளிநாட்டு நிதியிடல் முன்னைய ஆண்டின் 47 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்கு கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தது. 2008இல் தேறிய வெளிநாட்டு நிதியிடலான ரூ.26.6 பில்லியன், தேறிய வெளிநாட்டுக் கடன்கள் ரூ.12.9 பில்லியன், திறைசேரி உண்டியல்களில் வெளிநாட்டு முதலீடுகளின்

**வரைபடம் 6.6** **வங்கி நிதியிடலின் மூலங்கள்**



ஊடான ரூ.5.9 பில்லியன் கொண்ட தேறிய கடன்பாடுகள், திறைசேரி முறிகளில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கான ரூ.23.5 பில்லியன் கொண்ட தேறிய கொடுப்பனவுகள் மற்றும் ரூ.31.2 பில்லியன் கொண்ட வெளிநாட்டுக் கொடைகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது.

**2008இல் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்களின் அளவு அண்மைக் காலத்தில் நிலவிய போக்கின் தொடர்ச்சியை எடுத்துக்காட்டியது.** கடந்த ஆண்டுகளைப் போலவே, பெரும்பாலும் யப்பான், சேர்மனி கூட்டாட்சிக் குடியரசு மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் அரசுகள் போன்ற இருபுடை கொடைஞர்களிடமிருந்தும் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற பல்புடை முகவர்களிடமிருந்து வெளிநாட்டுக் கொடைகள் பெறப்பட்டன.

## 6.4 துணைத் தேசிய அரசுகளின் வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகள்

**இலங்கையில் துணைத் தேசிய அரச முறைமை மாகாண சபைகளையும் உள்ளூராட்சி மன்றங்களையும் உள்ளடக்குகிறது.** மாகாண சபைகளுக்கான அதிகாரப் பகிர்வின் மூலம் தீர்மானங்களை மேற்கொள்ளும் செயல்முறையைப் பன்முகப்படுத்தும் செயல்முறையின் அடிப்படையில் அரசியல் யாப்பிற்குச் செய்யப்பட்ட 13ஆவது திருத்தத்தின் கீழ் 9 மாகாண சபைகள் நிறுவப்பட்டுள்ளன. 2008இன் இறுதியில் நாட்டிலுள்ள உள்ளூராட்சி மன்ற முறைமை 18 மாநகர சபைகள், 42 நகர சபைகள் மற்றும் 270 பிரதேச சபைகளை உள்ளடக்கிய 330 நிறுவனங்களைக் கொண்டுள்ளது.

**துணைத் தேசிய அரசுகளின் செயற்பாடுகள் முக்கியமாக இரு மூலங்களிலிருந்து பெறப்பட்ட மூலவளங்களுடன் தொடர்ந்தன. அவற்றின் சொந்த அரசிறை மற்றும் மத்திய அரசிலிருந்து பெறப்பட்ட மாற்றல்கள்** வளங்களைத் திரட்டுவதில் வழங்கப்பட்ட அதிகாரங்கள் போதாமை, சார்பு ரீதியில் ஒடுங்கிய வரித்தளம், நலிவான தகவல் முறைமைகள், மட்டுப்படுத்தப்பட்ட நிருவாக இயலளவுகள் அடிப்படைப் பணிகளைக் கூட வழங்குவதற்கு அவற்றுக்கான போதிய அரசிறைகளை உருவாக்குவதில் இடையூறை ஏற்படுத்தின. அரசிறைக்கும் செலவினத்திற்கும் இடையில் ஏற்பட்ட விளைவு இடைவெளி இந் நிறுவனங்களை மத்திய அரசிலிருந்தான நிதியியல் மாற்றல்களில் பெருமளவில் தங்கியிருக்கச் செய்தது. எனினும், விரிவுபடுத்தப்பட்ட முயற்சிகளினால் 2008இல் மாகாண சபைகளின் வருவாய் கணிசமானளவு அதிகரித்தது. இது ஒரு உற்சாகமளிக்கின்ற அபிவிருத்தியாகும்.

**ஏனைய பல அமைப்பு ரீதியான வரையறைகளும் மாகாண சபைகளின் பயனுறுதியான செயலாற்றத்தைத் தொடர்ந்து தடை செய்ததன் மூலம் மொத்த அபிவிருத்திக்கான அவற்றின் பங்களிப்பை மட்டுப்படுத்துகிறது.** மாகாண சபைச் செலவினத்தில் கிட்டத்தட்ட 81 சதவீதத்திற்கு வகைகூறும் மீண்டெழும் செலவினத்தின் உயர் பங்கு அவற்றால் வழங்கப்பட்ட பணிகளின் அளவையும் தரத்தையும் மேம்படுத்துவதற்கு அவற்றின் இயலளவை கணிசமானளவில் மட்டுப்படுத்திய மூலதன முதலீடுகளுக்காக 19 சதவீதத்தை மட்டுமே கிடைக்கச் செய்கிறது. இத்துடன், மட்டுப்படுத்தப்பட்ட நிதியியல் இடைவெளி, மாகாணப் பணிகளின் நிதியிடலை பேணல் சார்ந்த அத்தியாவசிய பணியாக மேற்கொள்ளப்படுவதனால் இது அளவு மற்றும் தரம் இரண்டும் இல்லாது காணப்படுகிறது.

**விசேடமாக, அடிப்படைக் கல்வி, நலக்கவனிப்பு மற்றும் வீதி வசதிகளை வழங்குவது தொடர்பாக மத்திய அரசு மற்றும் மாகாண சபைகளால் மேற்கொள்ளப்பட்ட இரட்டிப்பு வேலையும் தீர்க்கப்பட வேண்டிய முக்கிய துறையாக வந்துள்ளது.** இதன் அடிப்படையில், துறைரீதியிலான ஒதுக்கீடுகள் உரிய முறையில் பகிர்ந்தளிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு மத்திய அரசாலும் மாகாண சபைகளாலும் பொறுப்பேற்கப்பட்ட செயற்றிட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் சம்பந்தமான செயற்பாடுகளின் இரட்டிப்பு வேலை மற்றும் ஒன்றின் வேலையை மற்றொன்று செய்தல் என்பவற்றை தவிர்ப்பதற்காக அம் மாகாணங்களுக்கான தேவைகளையும் மத்திய அரசின் ஒதுக்கீடுகளையும் உரிய முறையில் இனங்காண்பதற்கான தேவை காணப்படுகிறது. இதற்கு கிராமிய மற்றும் மாகாண மட்டங்களில் அபிவிருத்திச் செயற்பாடுகளின் சிறந்த ஒருங்கிணைப்பு தேவைப்படுவதுடன், இது வரவு செலவுத்திட்டம் 2009இல் முன்மொழியப்பட்ட சனாதிபதி செயலணிக் குழுவை ஏற்படுத்துவதனூடாகத் தீர்க்கப்படும்.

**உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண சபைகள் அமைச்சு 2008இல் துணைத் தேசிய அரசுகளின் செயற்பாடுகளை தொடர்ந்து கண்காணித்தது.** உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண சபைகள் அமைச்சு அரசுக்குத் துணைத் தேசிய அரசுகளுக்குமிடையே ஒரு மையமாக இருந்து மாகாணங்களுக்கு வரவு செலவுத்திட்ட நிதியங்களைத் தொடர்ந்து வழங்கியதுடன் அத்தகைய நிதியங்களின் வினைத்திறன் மிக்கதும் பயனுறுதிமிக்கதுமான பயன்பாட்டை உறுதிப்படுத்தும் குறிக்கோளுடன் பணியாற்றியது. இவ்வாண்டில் அமைச்சு துணைத் தேசிய அரசுகளின் நிருவாக இயலளவையும் ஆற்றலையும் மேம்படுத்துவதிலும் ஈடுபட்டதுடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி தொடர்பாக மாகாண மற்றும் கிராமிய வீதி மற்றும் செயற்பாடுகளின் அபிவிருத்திக்காக துணைத் தேசிய அரசுகள் மட்டத்திலான முதலீட்டை அதிகரிக்கிறது.

சம்பந்தப்பட்ட பிரதேச அபிவிருத்தியை அடையும் **குறிக்கோளுடன் நிதி ஆணைக்குழு மாகாண சபைகளுடனும் ஏனைய ஆர்வலர்களுடனும் நெருங்கிய தொடர்பாடலுடன் அதன் தொழிற்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொண்டது.** நிதி ஆணைக்குழு இக் குறிக்கோளை அடைவதற்கு தேசிய வரவு செலவுத்திட்டத்தினூடாக கிடைக்கத்தக்க மூலவளங்களை மாகாண சபைகளிடையே பகிர்ந்து கொள்வதை விதந்துரைப்பதற்கான முக்கிய பொறுப்பைக் கொண்டுள்ளது. இவ்வாண்டில் சமப்படுத்தப்பட்ட பிரதேச அபிவிருத்தியை அடைவதை நடைமுறைப்படுத்துவதற்காக மாகாண சபைகளால் சமர்ப்பிக்கப்பட்ட பல எண்ணிக்கையான செயற்றிட்ட முன்மொழிவுகளை நிதி ஆணைக்குழு விசேட குழு ஊடாக மதிப்பீடு செய்தது. பிரதேச ரீதியிலான பொருளாதார ஏற்றத்தாழ்வை படிப்படியாக குறைப்பதால் ஏற்படும் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளின் நன்மையை அடையும் பொருட்டு ஏனைய ஆர்வலர்களுடன் சேர்ந்து நிதி ஆணைக்குழுவின் இச் செயற்றிறன் மிக்க பணியைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய தேவை காணப்படுகிறது.

### மாகாண சபைகளின் செயலாற்றம்

**2008இல் மாகாண சபைகளின் பொதுவான வரவு செலவுத்திட்டச் செயலாற்றம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஓரளவு முன்னேற்றத்தை எடுத்துக்காட்டியது.** மாகாண சபைகளின் மொத்த அரசிறைச் சேகரிப்பு 2007இன் ரூ.26 பில்லியினிலிருந்து 2008இல் ரூ.31 பில்லியனுக்கு 21 சதவீதத்தால் அதிகரித்தது. 2008இல் மாகாண சபைகளின் மொத்த செலவினம் ரூ.127.8 பில்லியனானது கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இதுவொரு 13 சதவீத அதிகரிப்பாகும்.

**புரள்வு வரிகள் மற்றும் உரிமைக் கட்டணத்திலிருந்தான உயர்ந்த அரசிறைச் சேகரிப்பிற்கு மாகாண சபைகளின் மொத்த அரசிறையில் ஏற்பட்ட 21 சதவீத அதிகரிப்பே முக்கிய காரணமாகும்.** எனினும் அநேகமான வர்த்தகச் செயற்பாடுகள் மேல் மாகாணத்தை மையப்படுத்தி இருந்தமையால் மேல் மாகாண சபையானது மாகாண சபைகளினுடைய அரசிறைச் சேகரிப்பிற்கான முக்கிய பங்களிப்பாளராக தொடர்ந்து விளங்கியது. மாகாண சபைகளின் மொத்த அரசிறைச் சேகரிப்பில் மேல் மாகாண சபையின் மொத்த அரசிறை 2007இன் 66 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2008இல் 64 சதவீதமாக விளங்கியது. பங்கிலேற்பட்ட இவ் வீழ்ச்சி ஏனைய மாகாணங்களால் மேற்கொள்ளப்பட்ட அரசிறைச் சேகரிப்பின் மேம்பாட்டை பகுதியளவில் எடுத்துக்காட்டுகிறது. தெற்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்கள் 2008இல் அரசிறைக்குத் தொடர்ந்து பங்களிப்புச் செய்த ஏனைய பாரிய பங்களிப்பாளர்களாக விளங்கின.

**மாகாண சபைகளின் மீண்டெழும் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2008இல் 11 சதவீதத்தால் அதிகரித்தன.** மீண்டெழும் செலவினத்திலான அதிகரிப்பு முக்கியமாக மொத்த மீண்டெழும் செலவினத்தில் 77 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்த ஆளணி ஊதியங்களால் ஏற்பட்டது. கல்வி மற்றும் நலத்துறைகள் மாகாண சபைகளின் ஆளணி ஊதியங்களின் பெரும் பங்கை ஈர்த்தது. எஞ்சியவை பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவு தொடர்பான ஏனைய கூலியல்லாச் செலவினங்களுக்குப் பயன்படுத்தப்பட்டது.

**மாகாண சபைகளின் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் முக்கியமாக மாகாணத்துக்கென குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்திச் செயற்றிட்டங்களையும் வெளிநாட்டினால் நிதியிடப்பட்ட விசேட செயற்றிட்டங்களையும் உள்ளடக்கியிருந்தது.** 2008இல் பெயரளவு நியதிகளில் மொத்த முதலீட்டுச் செலவினம் ரூ.24.6 பில்லியனுக்கு 21 சதவீதத்தால் அதிகரித்தது.

**2008இல் மாகாண சபைகளுக்கான மத்திய அரசின் மாற்றல்கள் ரூ.88.9 பில்லியனாக விளங்கியது.** இம் மாற்றல்கள் தொகை வடிவிலான கொடைகள், பிரமாணத்தை அடிப்படையாகக் கொண்ட கொடைகள் மாகாணத்துக்கென குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்திக் கொடைகள் ஆகிய வடிவில் காணப்பட்டன.

### உள்ளூராட்சி மன்றங்களின் செயலாற்றம்

**மாகாண சபைகளின் பயனுறுதிமிக்க தொழிற்பாட்டைப் பாதித்த பல எண்ணிக்கையான தடைகளுக்கு மத்தியில் அடிமட்டத்திலுள்ள மக்களின் வாழ்க்கையை நன்னிலைக்குக் கொண்டு வரும் விதத்தில் நாட்டில் ஆளுகையின் முக்கிய நிறுவனங்களான உள்ளூராட்சி மன்றங்கள் அவற்றின் தொழிற்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொண்டன.** அதிகாரபூர்வமாக ஒப்படைக்கப்பட்ட அரசிறை மற்றும் மத்திய அரசிலிருந்தான மாற்றல்கள் அவற்றின் தொழிற்பாடுகளுக்கான நிதியின் முக்கிய மூலங்களாக விளங்கின. அரசியலமைப்பின் 13ஆம் திருத்தத்தின் கீழ் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டவாறு சொத்து மாற்றல் வரிகள் மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் போன்ற ஒப்படைக்கப்பட்ட அரசிறையின் சிலவற்றைச் சேகரிப்பதில் மாகாண சபைகள் உள்ளூராட்சி மன்றங்களுக்கான முகவராகச் செயற்பட்டன.

**அட்டவணை 6.6 மாகாண சபைகளுக்கான வரவு செலவுத்திட்ட வெளிப்பாடு**

ரூ. பில்லியன்

| விடயம் | 2005 | 2006 | 2007 | 2008 தற்காலிக மானவை |
|---|---|---|---|---|
| **மொத்த அரசிறை** | **16,132** | **19,481** | **25,868** | **31,370** |
| வரி அரசிறை | 13,818 | 16,586 | 21,473 | 25,994 |
| வரியல்லா அரசிறை | 2,314 | 2,895 | 4,395 | 5,376 |
| **மொத்த செலவினம்** | **73,009** | **94,470** | **113,067** | **127,848** |
| நடைமுறைச் செலவினம் | 59,132 | 76,428 | 92,721 | 103,199 |
| இதில் தனிப்பட்ட ஊதியம் | 46,479 | 60,497 | 74,711 | 79,878 |
| மூலதனச் செலவினம் | 13,877 | 18,042 | 20,346 | 24,649 |
| **மத்திய அரச மாற்றல்கள்** | **59,696** | **79,029** | **88,317** | **88,942** |
| திரட்டிய கொடைகள் | 47,107 | 62,342 | 70,742 | 76,773 |
| பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்ட கொடைகள் | 817 | 790 | 1,208 | 2,304 |
| பொருத்தப்பாட்டுக் கொடைகள் | 273 | 221 | 205 | - |
| மாகாணம் குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்திக் கொடைகள் (அ) | 5,561 | 7,345 | 6,995 | 7,262 |
| சிறப்புச் செயற்றிட்டங்களுக்கான பன்னாட்டுக் கொடைகள் | 5,937 | 8,331 | 9,167 | 2,603 |

(அ) மாகாணம் குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்திக் கொடைகள்.

மூலங்கள் : மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

**உள்ளூராட்சி மன்றங்களின் தொழிற்பாடுகளை மேலும் மேம்படுத்தும் பொருட்டு பல எண்ணிக்கையான பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டும்.** இவை, மனிதவள அபிவிருத்தி, உள்ளூராட்சி அதிகாரசபைகளில் தேர்ச்சிகளை தரமுயர்த்தலும் திட்டமிடலும், வலையமைப்புகள் மற்றும் நடைமுறைகளை உரிய முறையில் நெறிப்படுத்தல் அடிமட்டத்திலும் மாகாணங்கள் மட்டத்திலுமான சிறந்த ஒருங்கிணைப்பு, உள்ளூராட்சி அதிகாரசபைகள் சுயமாகவே கூடியளவு தாக்குப்பிடிக்கச் செய்வதற்காக அரசிறை வருமானத்தினை அதிகரித்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றன. இத்துடன், அரச மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கிடையேயான இடைவெளியை மேலும் குறைப்பதற்கு நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கும் உள்ளூராட்சி மன்றங்களால் மேற்கொள்ளப்படும் முகாமைத்துவ மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளில் மக்களின் பங்கேற்பை அதிகரிப்பதற்கான தேவையும் இருக்கிறது.

## 6.5 அரசதுறைப் படுகடனும் படுகடன் பணிக் கொடுப்பனவுகளும்

### அரச படுகடன்

**2008இல் வெளிநின்ற மொத்த அரச படுகடன் ரூ.3,578 பில்லியனுக்கு 18 சதவீதத்தால் அதிகரித்த போதிலும் பெயரளவிலான மொ.உ.உற்பத்தியிலான உயர் வளர்ச்சியிலிருந்து நன்மையடைந்து மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக முன்னைய ஆண்டின் 85 சதவீதத்திலிருந்து 81.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** 2008இல்

மொ.உ.உ.உற்பத்திக்கான படுகடனின் விகிதத்தின் வீழ்ச்சி 2002இல் பதிவு செய்யப்பட்ட 105.6 சதவீதம் கொண்ட உச்சமட்டத்திற்குப் பின்பு தொடர்ச்சியாக ஆறாவது ஆண்டு வீழ்ச்சியடையைப் பதிவு செய்தது. மொத்தப்படுகடன் 60 சதவீத உள்நாட்டுப் படுகடனையும் (ரூ.2,129.3 பில்லியன்) 40 சதவீத வெளிநாட்டுப் படுகடனையும் (ரூ.1,448.7 பில்லியன்) உள்ளடக்கியிருந்தது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டுப் படுகடன் 48.3 சதவீதமாகவும் வெளிநாட்டுப் படுகடன் 33.8 சதவீதமாகவும் காணப்பட்டது. முன்னைய ஆண்டிற்கான தொடர்பான விகிதங்கள் முறையே 47.9 சதவீதமாகவும் 37.1 சதவீதமாகவும் விளங்கின.

**வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை நிதியிடுவதில் உள்நாட்டுக் கடன்பாடுகள் மீது பெருமளவு தங்கியிருந்தமை உள்நாட்டுப் படுகடனை 2008இல் ரூ.414 பில்லியன் கொண்ட கணிசமான அளவால் ரூ.2,129 பில்லியனுக்கு அதிகரிக்கச் செய்தது.** மொத்த உள்நாட்டுப் படுகடனில் நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலத்தைக் கொண்ட படுகடன் முன்னைய ஆண்டின் 79 சதவீதத்திலிருந்து 2008இல் 76 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. திறைசேரி முறிகள் நடுத்தர காலத்திலிருந்து நீண்ட காலத்தைக் கொண்ட படுகடனின் 79 சதவீதத்திற்கும் வெளிநின்ற மொத்த உள்நாட்டுப் படுகடனின் 60 சதவீதத்திற்கும் வகை கூறி வெளிநின்ற மொத்த உள்நாட்டுக் கடனில் முதன்மைக் கருவியாக தொடர்ந்து விளங்கியது. சந்தைப்படுத்த முடியாத படுகடன் கருவிகளை கட்டம் கட்டமாக வெளியேற்றும் கொள்கையுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் இவ்வாண்டில் ரூபாப் பிணையங்கள் வழங்கப்படாமை மற்றும் மீள்கொடுப்பனவுகள் இருந்தமை என்பவற்றால் நடுத்தர

அட்டவணை 6.7 வெளிநின்ற அரசதுறைப் படுகடன் (ஆண்டு முடிவில்)

ரூ. மில்லியன்


| விடயம் | 2005 | 2006 | 2007 | 2008 தற்காலிகமானவை |
|---|---|---|---|---|
| **மொத்த அரச படுகடன்** | **2,222,341** | **2,582,648** | **3,041,685** | **3,578,064** |
| **உள்நாட்டுப் படுகடன் (அ)** | **1,265,721** | **1,479,230** | **1,715,198** | **2,129,331** |
| முதிர்வுகாலத்தின்படி | | | | |
| குறுங்காலம் | 262,153 | 313,218 | 363,198 | 505,468 |
| நடுத்தர மற்றும் நீண்டகாலம் | 1,003,568 | 1,166,012 | 1,351,999 | 1,623,863 |
| நிறுவனங்களின்படி | | | | |
| வங்கிகள் (ஆ) | 298,411 | 395,470 | 415,318 | 646,527 |
| வங்கியல்லாத்துறை | 967,310 | 1,083,660 | 1,299,779 | 1,482,703 |
| **வெளிநாட்டுக்கடன்** | **956,620** | **1,103,418** | **1,326,487** | **1,448,734** |
| வகைகளின்படி | | | | |
| சலுகைக் கடன்கள் | 919,430 | 1,023,077 | 1,099,911 | 1,227,222 |
| சலுகையற்ற கடன்கள் | 37,190 | 80,341 | 226,576 | 221,511 |
| நாணயத்தின்படி | | | | |
| சி.எ.உ | 401,615 | 465,679 | 508,241 | 531,849 |
| ஐ.அ டொலர் | 161,632 | 185,647 | 266,645 | 280,435 |
| யப்பானிய யென் | 286,673 | 317,220 | 338,621 | 445,596 |
| யூரோ | 76,060 | 98,312 | 121,460 | 132,047 |
| ஏனையவை | 30,640 | 36,560 | 91,520 | 58,806 |
| குறிப்பு : செலாவணிவீத வேறுபாடுகள் | -100,751 | 108,579 | 71,646 | 117,785 |

மூலம் : நிதி திட்டமிடல் அமைச்சு

அ) 1993 இல் வழங்கப்பட்ட ரூபா 24,088 மில்லியன் கொண்ட நீண்ட கால முறிகளை உள்ளடக்குகின்றது. இது கூட்டுறவு மெத்த விற்பனை நிலையத்தின் சார்பில் வர்த்தக வங்கிகளுக்கு 2003 நவம்பரில் வழங்கப்பட்ட ரூ. 4,397 மில்லியன் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளருக்கு வழங்கப்பட்ட ரூ.49,646 மில்லியன் கொண்ட அரசாங்க திறைசேரி முறிகளை உள்ளடக்கவில்லை.

(ஆ) கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளின் வெளிநின்ற மீதிகள் : 2005 இறுதியில் ரூ.71,859 மில்லியன், 2006 இறுதியில் ரூ.89,288 மில்லியன், 2007இல் ரூ.88,871 மில்லியன் மற்றும் 2008இல் ரூ.3,060 மில்லியன்.

வரைபடம் 6.7 வெளிநின்ற அரச படுகடன் (மொ.உ.உ.இன் சதவீதமாக)





காலத்திலிருந்து நீண்ட காலத்தைக் கொண்ட உள்நாட்டுப் படுகடனில் ரூபாப் பிணையங்களின் பங்கு முன்னைய ஆண்டின் 10 சதவீதத்திலிருந்து 8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. குறுகிய கால உள்நாட்டுக் கடன்பாடுகளின் முக்கிய கருவியான திறைசேரி உண்டியல்களின் வெளிநின்ற தொகை 2008இல் ரூ.95.6 பில்லியனால் அதிகரித்தது. எனினும், குறுகிய காலப் படுகடனில், திறைசேரி உண்டியல்களின் பங்கு இவ் வகையினுள் அரச வங்கிகளுடனான அரசின் மேலதிகப் பற்றின் பங்கிலான கூர்மையான அதிகரிப்பின் முக்கிய காரணத்தால் 2007இன் 85 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 80 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**இதேவேளை, வங்கியல்லாத்துறை வசமுள்ள வெளிநின்ற படுகடன் 2008இல் ரூ.114 பில்லியனால் ரூ.1,482.7 பில்லியனுக்கு அதிகரித்தது.** ஊழியர் சேம நிதியம் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி இத் துறையில் முக்கிய முதலீட்டாளர்களாக தொடர்ந்து விளங்கி வங்கியல்லாத்துறை வசமுள்ள வெளிநின்ற மொத்தப் படுகடனில் முறையே 46 சதவீதத்தையும் 14 சதவீதத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

**2008இல் வரவு செலவுத்திட்ட நிதியிடலுக்கான வங்கித்தொழில் முறையிலிருந்தான உயர் கடன்பாடுகளைப் பிரதிபலிக்கும் வகையில் உள்நாட்டு வங்கித்தொழில் துறைக்கான வெளிநின்ற படுகடன் பொறுப்புக்கள் ரூ.231.2 பில்லியனால் ரூ.646.5 பில்லியனுக்கு கணிசமானளவில் அதிகரித்தது.** ஒப்பீட்டளவில், இது முன்னைய ஆண்டில் ரூ.19.8 பில்லியனால் மட்டுமே அதிகரித்திருந்தது. வெளிநின்ற மொத்த உள்நாட்டுப் படுகடனுக்கான வங்கித்தொழில் பிரிவின் பொறுப்புக்களின் பங்கும் 2007இன் 24 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 30 சதவீதத்திற்கு அதிகரித்தது. மத்திய வங்கி வசமுள்ள வெளிநின்ற உள்நாட்டு படுகடன் ரூ.134 பில்லியனால் ரூ.239.2 பில்லியனுக்கு அதிகரித்திருக்கையில் வர்த்தக வங்கிகளின் பங்கு ரூ.97 பில்லியனால் ரூ.407.3 பில்லியனுக்கு அதிகரித்தது. வர்த்தக வங்கிகளின் வெளிநின்ற மொத்தப் படுகடனில், வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுப் படுகடனின் வெளிநின்ற தொகை 2007இன் ஐ.அ.டொலர் 1,659.2 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 1,686.2 மில்லியனுக்கு அதிகரித்து. இது ஐ.அ.டொலர் 282.5 மில்லியன் கொண்ட கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்தான கடன்பாடுகளையும் ஐ.அ.டொலர் 1,403.6 மில்லியன் கொண்ட வெளிநின்ற இலங்கை அபிவிருத்தி முறிகளையும் உள்ளடக்கியிருந்தது. அண்மிய ஆண்டுகளில் வெளிநாட்டு

**வரைபடம் 6.8 வெளிநின்ற அரச படுகடனின் உள்ளமைப்பு - 2008**




நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுப் படுகடனிலான வளர்ச்சி செலாவணி வீத மாறுபாடுகளுக்கு உள்நாட்டுப் படுகடனின் பாதிப்புள்ளாகும் தன்மையை அதிகரித்தது.

**2008இல் வெளிநின்ற மொத்த வெளிநாட்டுப் படுகடன் ரூ.1,448.7 பில்லியனுக்கு 10 சதவீதத்தால் அதிகரித்தது.** எனினும், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக, வெளிநின்ற மொத்த வெளிநாட்டுப் படுகடன் 2007இன் 37.1 சதவீதத்திலிருந்து 32.8 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது. மொத்த வெளிநாட்டுப் படுகடனில் சலுகை ரீதியிலான படுகடனின் பங்கு 85 சதவீதத்திற்கு அதிகரித்திருக்கையில் அரசு வர்த்தக கடன்பாடுகளின் கணிசமான பங்கை மீளச் செலுத்தியதால் சலுகையல்லாப் படுகடனின் பங்கு 15 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. சலுகையல்லா மொத்தப் படுகடனில் கிட்டத்தட்ட 74 சதவீதம் வெளிநாட்டு வர்த்தகப் படுகடனைக் கொண்டிருந்தது. இதேவேளை, மொத்த வெளிநாட்டுப் படுகடனில் செயற்றிட்டக் கடன்களின் பங்கு 2007இன் 82 சதவீதத்திலிருந்து 87 சதவீதத்திற்கு அதிகரித்தது.


**2008இல் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் நான்கு பிரதான நாணயங்களில் காணப்பட்டது; சிறப்பு எடுப்பனவு உரிமைகள் (சிஎஉ) (37 சதவீதம்), யப்பானிய யென் (31 சதவீதம்), ஐ.அ.டொலர் (19 சதவீதம்) மற்றும் யூரோ (9 சதவீதம்).** எஞ்சிய 4 சதவீதம் ஏனைய நாணயங்களில் காணப்பட்டது. 2008இல் இலங்கை ரூபா ஐக்கிய அமெரிக்க டொலர், சிஎஉ மற்றும் யப்பானிய யென்னுக்கு எதிராக முறையே 3.9 சதவீதத்தாலும், 1.4 சதவீதத்தாலும், 22.4 சதவீதத்தாலும் பெறுமதித் தேய்வடைந்திருக்கையில் அது யூரோவிற்கெதிராக 0.9 சதவீதத்தால் பெறுமதி உயர்வடைந்தது. 2008இல் செலாவணி வீத வேறுபாடுகளின் தாக்கம் யாதெனில் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனின் ரூபாப் பெறுமதி ரூ. 117.8 பில்லியனால் அதிகரித்தமையாகும்.

**அண்மைக் காலத்தில் மொ.உ.உற்பத்திக்கான வெளிநின்ற படுகடனின் விகிதத்தில் அவதானிக்கப்பட்ட உறுதியான வீழ்ச்சிக்கு மத்தியிலும் இறை முகாமைத்துவ (பொறுப்பாண்மை) சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கிடப்பட்ட மட்டத்தை அடைவதற்கான இப் போக்கைத் தொடர்வதற்கு பலமான முயற்சிகள் அவசியமாக தேவைப்படுகிறது.** இறை முகாமைத்துவ (பொறுப்பாண்மை) சட்டத்தின் கீழ் மொ.உ.உற்பத்திக்கான படுகடன் விகிதம் 2013 அளவில் 60 சதவீதத்திற்குக் குறைக்கப்பட வேண்டும். உலகளாவிய நிதியியல் நெருக்கடியின் மத்தியில் 2009இல் இறைச் செயலாற்றம் பன்னாட்டு நிதியியல் சந்தைகளிலான இறுக்கமான திரவத்தன்மை நிலைமைகள் காரணமாக திட்டமிடப்பட்ட வெளிநாட்டுக் கடன்பாடுகளின் அளவைவிட குறைந்தளவைப் பெறும் போல் இருக்கிறது. எனவே, நிதியியல் நெருக்கடியிலிருந்து எழும் சவால்களை எதிர்கொள்வதில் மீண்டெழும் செலவினம், வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை மற்றும் கடன்பாடுகளிலான கணிசமான தேவையற்ற மாறுபடுகளைத் தவிர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். நிதியியல் நெருக்கடிகளின் அழுத்தங்கள் தணிந்ததும், அரசின் கொள்கை ஆவணங்களில் அரசால் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட வழமையான இறைத் திரட்சிப் பாதைக்குள் திருப்பி விடுவது அத்தியாவசியமாகிறது. இத்துடன், தோற்றம் பெற்றுவரும் நடுத்தர வருமானம் பெறும் நாடாக இருந்துகொண்டு, எதிர்வரும் ஆண்டுகளில் சலுகைரீதியான வெளிநாட்டுக் கடன்களை அடைவதில் இலங்கை சவாலை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். எனவே, அரசின் வரவு செலவுத்திட்டம் மீதான சுமையைக் குறைப்பதற்கு அரச தனியார் பங்குடைமை போன்ற மாற்று செயற்றிட்ட நிதியிடல் முறைகளை ஊக்குவிப்பதற்கான தேவை காணப்படுகிறது.

## படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

**கடன் தீர்ப்பனவு மற்றும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் பெறுநர்களுக்கான வட்டிக் கொடுப்பனவுகளை உள்ளடக்கிய அரசின் மொத்த பணிக் கொடுப்பனவுகள் 2008இல் ரூ.592.8 பில்லியனுக்கு 17 சதவீதத்தால் அதிகரித்தது.** மொத்தக் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் ரூ.380.3 பில்லியனாக விளங்கி மொத்த படுகடன் பணிக் கொடுப்பனவுகளின் 64 சதவீதத்திற்கு வகை கூறியது. 2008இல் ரூ.212.5 பில்லியன் கொண்ட மொத்த வட்டிக் கொடுப்பனவுகள் எஞ்சிய 36 சதவீதத்திற்கு வகை கூறியது. உள்நாட்டு மூலங்களுக்கான படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

**வரைபடம் 6.9 படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (மொ.உ.உ. இன் சதவீதமாக)**



**அட்டவணை 6.8** அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

ரூ. மில்லியன்

| விடயம் | 2005 | 2006 | 2007 | 2008 தற்காலிக மானவை | 2009 மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|
| படுகடன் பணிக் கொடுப்பனவுகள் | 344,866 | 444,303 | 500,514 | 592,804 | 725,438 |
| உள்நாடு | 316,511 | 381,324 | 415,089 | 440,918 | 593,938 |
| வெளிநாடு | 28,355 | 62,979 | 85,425 | 151,886 | 131,500 |
| கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் | 224,707 | 293,525 | 317,833 | 380,330 | 475,000 |
| உள்நாடு | 203,347 | 247,536 | 253,719 | 258,720 | 375,500 |
| வெளிநாடு | 21,360 | 45,989 | 64,114 | 121,609 | 99,500 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 120,159 | 150,778 | 182,681 | 212,475 | 250,438 |
| உள்நாடு | 113,164 | 133,788 | 161,370 | 182,198 | 218,438 |
| குறுங்காலம் | 20,300 | 24,558 | 53,874 | 65,364 | 89,246 |
| நடுத்தர மற்றும் நீண்டகாலம் | 92,864 | 109,230 | 107,496 | 116,834 | 129,192 |
| வெளிநாடு | 6,995 | 16,990 | 21,311 | 30,277 | 32,000 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி
நிதி திட்டமிடல் அமைச்சு

ரூ.440.9 பில்லியனாக விளங்குகையில் வெளிநாட்டு மூலங்களுக்கான படுகடன் பணிக்கொடுப்பனவுகள் வெளிநாட்டு வர்த்தகக் கடன்களின் அதிகரித்த மீள்கொடுப்பனவுகளின் முக்கிய காரணமாக ரூ.151.9 பில்லியனுக்கு அதிகரித்தன. முதிர்ச்சியடையும் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுக் கடன்களின் ஒரு பகுதி இவ்வாண்டில் மீண்டும் பயன்படுத்தப்பட்டமையால் உள்நாட்டு மூலங்களுக்கான மொத்த கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் வரவு செலவுத்திட்டம் 2008இலான மதிப்பிடப்பட்ட மட்டத்தின் கீழ் காணப்பட்டது. 2008இல் மொத்த படுகடன் பணிக் கொடுப்பனவுகள் கடன் அபிவிருத்தி பங்காளர்கள் 2005இல் பெறப்பட்ட தன்னிச்சையான படுகடனை காலம் கடத்திக் கொடுப்பதற்கான சட்ட இசைவின் கீழ் ஒத்திவைக்கப்பட்ட படுகடன் மீள்கொடுப்பனவுகளின் ஒரு பகுதியையும் ஒத்தி வைக்கப்பட்ட நிபந்தனைகளின் கீழ் பெறப்பட்ட பாதுகாப்புக் கடன்களின் மீள்கொடுப்பனவுகளையும் உள்ளடக்குகிறது.

**2008இல், சில படுகடன் பணிக் குறிகாட்டிகள் தொடர்ந்து முன்னேற்றமடைந்து வரும் போக்கைக் காட்டின.** இதன்படி, மொ.உ.உ.இன் சதவீதமாக மொத்த படுகடன் பணிக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டின் 14 சதவீதத்திலிருந்து 13.4

**அட்டவணை 6.9** அரசின் படுகடன் குறிகாட்டிகள்

| குறிகாட்டிகள் | 2005 | 2006 | 2007 | 2008 தற்காலிக மானவை | 2009 மதிப்பீடுகள் (அ) |
|---|---|---|---|---|---|
| அரசின் படுகடன்/மொ.உ.உ | 90.6 | 87.9 | 85.0 | 81.1 | 77.1 |
| -உள்நாட்டு படுகடன்/மொ.உ.உ | 51.6 | 50.3 | 47.9 | 48.3 | 45.6 |
| -வெளிநாட்டு படுகடன்/மொ.உ.உ | 39.0 | 37.5 | 37.1 | 32.8 | 31.5 |
| மொத்த வெளிநாட்டு படுகடன்/ ஏற்றுமதிகள் (ஆ) | 120.6 | 124.6 | 127.4 | 131.9 | 153.4 |
| மொத்தப் படுகடன் பணிகள்/மொ.உ.உ | 14.1 | 15.1 | 14.0 | 13.4 | 13.9 |
| மொத்தப் படுகடன் பணிகள்/ அரசிறை (இ) | 90.8 | 93.0 | 88.6 | 90.5 | 84.8 |
| இதில் உள்நாட்டு படுகடன் பணிகள்/அரசிறை (இ) | 83.3 | 79.8 | 73.5 | 67.3 | 69.5 |
| மொத்தப் படுகடன் பணிகள்/ அரச செலவினம் (ஈ) | 42.6 | 44.1 | 43.2 | 43.1 | 43.5 |
| இதில் உள்நாட்டு படுகடன் பணிகள்/ அரச செலவினம் (ஈ) | 39.1 | 37.9 | 35.8 | 32.0 | 35.6 |
| வெளிநாட்டு படுகடன் பணிகள்/ ஏற்றுமதிகள் (ஆ) | 3.6 | 7.1 | 8.2 | 13.8 | 12.3 |
| மொத்த வட்டி/மொ.உ.உ | 4.9 | 5.1 | 5.1 | 4.8 | 4.8 |
| உள்நாட்டு வட்டி/மொ.உ.உ. | 4.6 | 4.6 | 4.5 | 4.1 | 4.2 |
| உள்நாட்டு வட்டி/அரச நடைமுறைச் செலவினம் | 25.5 | 24.4 | 25.9 | 24.5 | 26.5 |
| வெளிநாட்டு வட்டி/ஏற்றுமதிகள் (ஆ) | 0.9 | 1.9 | 2.0 | 2.8 | 3.0 |

(அ) ஆரம்ப வரவுசெலவுத் திட்டத்தின் அடிப்படையில்
(ஆ) பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதிகள்
(இ) பொருளாதார வடிவமைப்பில் அரச வருமானம்
(ஈ) கடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளை உள்ளடக்கிய அரச செலவினம்

மூலங்கள் : இலங்கை மத்திய வங்கி
நிதித் திட்டமிடல் அமைச்சு

சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மொத்த வட்டிக் கொடுப்பனவுகளும் 2007இன் 5.1 சதவீதத்திலிருந்து 4.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதேவேளை, பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிக்கு மொத்த வெளிநாட்டுப் படுகடனின் விகிதம் முக்கியமாக 2008இல் பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்களின் சார்புரீதியிலான மெதுவான வளர்ச்சி காரணமாக முன்னைய ஆண்டின் 127.4 சதவீதத்திலிருந்து 2008இல் 131.9 சதவீதத்திற்கு அதிகரித்தது.